பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 06 வியாழக்கிழமை 19.03.2020 கதிர் 134

### இது ரகசியம் அல்ல!

'நுணலும் தன் வாயால் கெடும்' என்பார்கள். அப்படித் தன் வாயால், முக்கிய கட்சி ஒன்றின் வேட்பாளராகும் வாய்ப்பை இழந்த ஓர் அம்மணியின் சோகக் கதை இது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பக்கம் 02

# பேராபத்து!

## யாழில் கொரோனா பரவினால் எதிர்கொள்வது பெரும் சவால் என்கின்றது மருத்துவர் சங்கம்




(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணத்தில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டு வார காலமாவது வர்த்தக நிலையங்களை மூடி, மக்கள் நடமாட்டத்தைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள். யாழ்ப்பாணத்துக்கு கொரோனா வைரஸின் தாக்கம் வருமாயின் அதனை எதிர்கொள்வதற்குப் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும். பேராபத்துச் சூழல் ஏற்படும்."

– இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் பிரதிநிதிகள் கூட்டாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். பக்கம் 03

## கொரோனா பாதித்தோர் 51!

### நேற்று மட்டும் 8 பேர் அடையாளம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 8 பேர், நேற்று இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பக்கம் 02

## தனியார் வைத்தியசாலைகளுக்கும் கொரோனா பரிசோதனை அனுமதி

கொழும்பு, மார்ச் 19

கடும் நிபந்தனைகளுடன் தனியார் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான மருத்துவப் பக்கம் 03

## அம்பிகாவே விலகினார்!

யாழ்ப்பணம், மார்ச் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றிருந்த அம்பிகா பக்கம் 03

## சங்கரி அணியும் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்தது. பக்கம் 02

## பிள்ளையான் மீது கருணா பாய்ச்சல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எதிர்வரும் நாடாளுமன்றத் பக்கம் 02

## மூன்று தமிழ்க் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வேட்புமனு

### ஐ.தே.க., சு.க., ஜே.வி.பியும் நேற்றுத் தாக்கல்







யாழ்ப்பாணம், மார்ச்19

யாழ் மாவட்டத்தில் பிரதான தமிழ்க் கட்சிகள் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பக்கம் 03

## சம்பந்தன் தலைமையில் திருமலையில் வேட்புமனு



திருமலை, மார்ச்.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான வேட்பாளர்கள் நேற்று முற்பகல் 11 மணியளவில் திருகோண பக்கம் 03

## தேர்தலை ஒத்திவைப்பதா? மார்ச் 25இல் தான் முடிவு

கொழும்பு, மார்ச் 19

பொதுத் தேர்தலைத் திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதா அல்லது ஒத்திவைப்பதா என்பது தொடர்பில் மார்ச் 25ஆம் திகதி முடிவு பக்கம் 03

## புத்தளம், நீர்கொழும்பு பகுதிகளில் காலவரையற்ற ஊரடங்குச் சட்டம்!

கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றுப் பிற்பகல் 4.30 மணி முதல் மறு அறிவித்தல் வரை புத்தளம் மாவட்டத்திலும், நீர்கொழும்புப் பகுதியிலும் பக்கம் 03



## தமிழரசுக்குள் கொரோனா!

### பெரும் அச்சத்தில் கிழக்கு வேட்பாளர்கள்

மட்டக்களப்பு, மார்ச் 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்காக வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார். இதையடுத்து, அவர் பிரசாரத்துக்குச் சென்று வந்த வீடுகளில் உள்ள மக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகிறார்கள்.

மட்டக்களப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்னாள் மாவட்ட அரச அதிபர் மாணிக்கம் உதயகுமார் போட்டியிடுகிறார். அவரது நண்பர் ஒருவர் பிரித்தானியாவில் இருந்து வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

அவர் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளமை பக்கம் 03

# வன்னியில் இதுவரையில் 12 கட்சிகளும் 5 சுயேச்சைகளும் வேட்புமனுத்தாக்கல்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் 06 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக வன்னி தேர்தல் தொகுதியில் இதுவரை 12 கட்சிகளும் 5 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

வவுனியா, மன்னார், முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக நேற்றுப்மாத்திரம் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் உள்ளடங்கலாக 11 வேட்புமனுக்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இதனால் மாவட்ட செயலகத்திற்கு கடும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இலங்கை தமிழரசுக் கட்சியில் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வினோ நோகராதலிங்கம், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன் மற்றும் க.சிவலிங்கம் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

தமிழ்தேசியமக்கள் முன்னணி சார்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் சிவபாதம் கஜேந்திரகுமார், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், தனபாலசுந்தரம் தமிழகன், தங்கராஜா நிரஞ்சன், கனகையா அழகேந்திரன், செல்லத்தம்பி திலகநாதன், மேரிறெஜீனா சஜீந்திரசிங்கம், அந்தோணி அமிர்தநாதன் தற்குரூஸ், செல்லத்துரை சிறீரங்கநாதன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

முன்னாள் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் சிவசக்தி ஆனந்தன், தில்லையம்பலம் கெங்காதரன், லூட்ஸ் மாலினி வெளிற்றன், வடிவேலு இராசரட்ணம், பஞ்சாட்சரம் உமாபதி, ஞானசீலன் குணசீலன், சின்னத்தம்பி இராசன், கோபாலசாமி சற்குணபாலன், பர்னாந்து ஜீவநாயகம் சதானந்தம் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) சார்பில் அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ், குலசிங்கம் திலீபன், சுப்பையா சந்துரு, ராசு குகனேஸ்வரன், இரத்தினம் ஜெகதீசன், யோசப் சுதர்சன், சவேரியன் பொனவந்தூர் லெம்பேட், ராசநாயகம் எமிலிவிக்டர், சிவராமலிங்கம் கிரிதரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

சிறிரெலோ மற்றும் வரதர் அணி சார்பில் தமிழர் சமூக ஜனநாயக கட்சியில் பரராசசிங்கம் உதயராசா, வீரவாகு ரூபோ சிவமூர்த்தி, சந்தாம்பிள்ளை யேசுதாசன், சின்னச்சாமி திருஞானம், தவராசா சசிறோகன், சுந்தரராஜா சுமன், ஈஸ்வரலிங்கம் சதுதாஸ் ஆபிரகாம் லிங்கன், கந்தையா சந்திரமோகன், கிங்ஸ்லி அன்ரன் பாஸ்கர்ராஸ் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பில் முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தலைமையிலான வேட்பாளர்கள், சுயேச்சைகாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜா தலைமையிலான வேட்பாளர்கள், ஜே.வி.பி. கட்சியில் உபாலி தலைமையிலான வேட்பாளர்கள் எனப் பல்வேறு கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. (100)

கொரோனா குறித்துக் கருத்து வெளியிட்டமைக்காக

# ராஜித, சரத் பொன்சேகா குறித்து ஆரம்பித்தது பொலிஸ் விசாரணை



கொழும்பு,மார்ச்.19

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புபிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று சம்பந்தமாக ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்துத் தொடர்பில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தனக்கு சிறை வாழ்க்கைப் புதிதல்ல எனத் தெரிவித்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தன்னைக் கைது செய்து, கொரோனாவைக் கட்டுப்படுத்துவது என்றால் 2 வருடங்கள் அல்ல, 5 வருடங்கள் என்றாலும் சிறையில் இருக்கத் தயார் என்றும் தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன்னைக் கைதுசெய்து கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்துவார்களாயின், நாட்டுக்காக, நாட்டுமக்களுக்காகத்தான் சிறைச் சோறு உண்ண தயார் என்றும் தெரிவித்தார்.

எமது கையில் தவறொன்று நடந்து விட்டது. ஆனால் நேற்று வெளியாகியுள்ள பத்திரிகைகளில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை குறித்து, ஜனாதிபதியும், சுகாதாரத் தரப்பினரும் மாறுப்பட்ட கருத்துகளை முன்வைக்கின்றனர். எனவே இவ்வாறு மாறுபட்ட எண் ணிக்கையை முன்வைக்கும் ஜனாதிபதியை சிறையில் அடைப்பார்களா எனவும் கேள்வி எழுப்பியமையுடன், எமக்கு தவறு நேர்ந்தது போன்றே, ஜனாதிபதிக்கும் தவறு நேர்ந்திருக்கலாம் – என்றார்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளராக போட்டியிடும் யாழ். மாவட்ட வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் பெரும் பிய்ச்சல், பிடுங்கல் இடம் பெற்றமை நாம் அறிந்ததே.

ஆரம்பத்தில் இருந்தே இளைஞர்களுக்கு இடமளித்தல், பெண்களுக்கு வாய்ப்பளித்தல் என்று தமிழரசின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறிவந்த நிலையில், திடீரென அமரர் ரவிராஜின் துணைவியாரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதனும் வேட்பாளர்கள் எனச் செய்திகள் வெளியாகின.

அம்பிகா சற்குணநாதன் தேர்தலில் தோல்வியுற்றாலும் தேசியப்பட்டியல் மூலம் அவருக்கு இடமளிக்கப்படும் என்று உறுதியாகக் செய்திகள் வெளியாகின.

இந்தச் சமயத்தில்தான் அம்பிகா சற்குணநாதனுக்கு எதிராகக் காட்டமான கருத்து நிலைப்பாடுகள் பிரதிபலிக்கப்பட்டன. 'கொழும்பிலிருந்து இன்னொரு இறக்குமதி தேவைதானா?' என்றும் கேள்வி எழுப்பப்பட்டது.

அம்பிகா சற்குணநாதனை வேட்பாளராகக் கொண்டு வந்தமைக்காக சுமந்திரனுக்கு எதிராகவும் காட்டமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

தமிழரசு மகளிர் அணியைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் இரு பெண்மணிகள், *'புலிகள் அமைப்பைக் கருணா அழித்தமை போல தமிழரசை அழிக்கவந்தவர் சுமந்திரன்'* என்று பகிரங்கமாகவசைபாடவும் தயங்கவில்லை.

இந்தச் சமயத்தில்தான் – கடந்த செவ்வாயன்று அம்பிகா சற்குணநாதன் போட்டியிடமாட்டார் என்றும், அவரது இடத்துக்கு யாழ். மேயர் ஆர்னால்ட் நிறுத்தப்படுகின்றார் என்றும் செய்திகள் வெளியாகின.

வெளியில் கிளர்ந்த எதிர்ப்பைச் சகிக்க முடியாத தமிழரசுத் தலைமை பின்வாங்கி அம்பிகாவைத் தேர்தலில் நிறுத்தும் முயற்சியை விலக்கிக் கொண்டது எனப் பேச்சடிப்பட்டது. உண்மையில் நடந்தது அதுவல்ல. நடந்தது என்வென்பதைப் பிறகு கூறுகின்றேன்.

முதலில், அம்பிகா இல்லை என்ற தகவல் – உறுதியான நிலைப்பாடு – கடந்த திங்கட்கிழமை மாலைதான் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. உடனடியாகக் கட்சியின் உள்தலைமையைக் கூட்டி ஆராய்ந்தார் மாவை.

ஏற்கனவே, நியமனம் கேட்டு விண்ப்பித்தவர்களின் இரண்டு விண்ணப்பங்களே யாழ்ப்பாணத்தில் இருந்தது. ஒன்று – ஆனல்ட்டினுடையது. மற்றையது – சம்பந்தப்பட்ட மகளிர் அணித் தலைவியினுடையது.

அம்பிகா என்ற பெண்ணின் இடத்துக்கு மகளிர் அணித் தலைவியின் விண்ணப்பமே முதலில் பரிசீலிக்கப்பட்டது.

ஆனால், சுமந்திரனைக் கருணாவுடன் ஒப்பிட்டு, மிக மோசமாக – பகிரங்கமாக – விமர்சித்த ஒரு பெண்மணியை எப்படி சுமந்திரனுடன் ஒரே அணியில் சேர்த்து போட்டியிட வைக்க முடியும்? வேறு வழியின்றி அவர் பெயரை வெட்டிக் சாய்த்தார் மாவையர்.

அதனால், மற்றைய விண்ணப்பதாரியான ஆர்னல்ட்டுக்கு வாய்ப்புக் கிட்டியது.

மேற்படி மகளிர் அணி யுவதி – அம்மணி – நுணலும் தன் வாயால் கெடும் என்பதை அப்போதுதான் உணர்ந்திருப்பார் போலும்.

இனி அம்பிகாவின் விடயத்துக்கு வருவோம்.

அவரின் இளைய சகோதரி ஒருவர் ஆஸ்திரேலியாவில் இருக்கின்றார். அந்தச் சகோதரிக்குக் கடும் சுகவீனம். அவரைப் பார்த்துப் பராமரிக்க வேண்டிய அளப்பரிய பொறுப்பு அம்பிகாவுக்கு. அதை நிறைவு செய்வதாயின் தற்சமயம் அவர் இலங்கையில் தங்கியிருக்க முடியாது. ஆஸி செல்லவேண்டும். ஆகவே தேர்தலில் போட்டியிடும் முடிவை அவர் தள்ளிவைத்தார். சுமந்திரனுக்கும் ஏனையோருக்கும் அறிவித்தார். தமது தனிப்பட்ட நிலைமை கருதி இந்த வேட்பாளர் நியமனத்தை அம்பிகாவே புறமொதுக்கினார்.

ஆனால், அவரின் பெயர் மாவட்டத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் ஒதுக்கப்பட்டாலும், தேசியப்பட்டியல் வேட்பாளரில் ஒருவராக அவரது பெயரைப் பதிவதில் கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனும், பேச்சாளர் சுமந்திரனும் உறுதியாக உள்ளனர் என்று தெரிகின்றது.

தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியில் கே.வி.தவராஜா, குருகுலராஜா, குலநாயகம் போன்றோரின் பெயர்கள் இருந்தன என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தப் பட்டியல் இன்று நண்பகல் 12 மணிக்கு வேட்புமனுத் தாக்கலுக்கான நேரம் முடிவடைய முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அதில் வேட்பாளரின் பெயர் பதியப்பட்டால் போதும். ஒப்பம் அவசியமல்ல.

ஆகவே, அம்பிகா சற்குணநாதன் நாட்டில் பிரசன்னமாக இல்லாவிட்டாலும் – யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டாலும் – அவரது பெயரை தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியில் இணைக்க முடியும்.

கட்சியின் பிற உறுப்பினர்கள், தலைவர்கள் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அம்பிகாவின் பெயர் அந்தப் பட்டியலில் பதியப்படும் என்பது உறுதி எனத் தெரிகின்றது.

இன்று தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியில் அம்பிகாவின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டும் அவர் எம்.பியாகி விட முடியாது.

கட்சிக்குக் கிடைக்கும் தேசியப் பட்டியல் எம்.பிக்களின் இடத்துக்கு அவரை நியமிக்க தமிழரசு முடிவு செய்ய வேண்டும்.

சம்பந்தனையும், சுமந்திரனையும் மீறி, அந்த இடம் அவருக்கு வழங்கப்படாமல் வேறு யாருக்காவது கிட்டுமா? தெரியவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

–மின்னல்–

## சங்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீரசிங்கம் ஆனந்த சங்கரியை முதன்மை வேட்பாளராகக் கொண்டு இந்த வேட்புமனு யாழ்ப்பாணம் மாவட்ட செயலக தேர்தல் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் முன்வைக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது. அந்த மக்கள் சார்பில் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 11 ஆண்டுகள் தமிழ் தலைமைகளால் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவில்லை.

அதனால் அந்த மக்களுக்காக இந்தத் தேர்தலில் கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் பதிந்திருக்கும் உதயசூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடுகின்றது என்று வேட்பாளர் சண்முகராசா அரவிந்தன் தெரிவித்தார்.

முதன்மை வேட்பாளராக வீரசிங்கம் ஆனந்தசங்கரி, தம்பையா திருஞானசம்பந்தர், அரவிந்தன் சண்முகராசா, காசிப்பிள்ளை குலசேகரம், இராமையா சங்கையா, மதியாபரணம் மயூரன், தம்பையா இராசலிங்கம், சங்கரன் சகுமார், சீவரத்தினம் சோபிதாசன் மற்றும் விவேகானந்தன் ஜங்கரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். (ஐ)

## பிள்ளையான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தோல்வி அடைவது உறுதி என விநாயமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் நேற்றுப் புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் இணைந்து தமிழ்க் கட்சிகள் போட்டியிட அழைப்பு விடுத்தும் எங்களைப் பிள்ளையான் நிராகரித்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது வேட்பாளர்களாக மதுபானச்சாலை உரிமையாளர்களையும், வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களையும் நிறுத்தியுள்ளது. இவ்வாறனவர்கள் எவ்வாறு மக்களுக்குச் சேவை செய்யப் போகிறார்கள் என்பதே எனது கேள்வி.

அம்பாறை மாவட்டத்தில் ஏன் நான் போட்டியிடுகிறேன் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்தில் மக்களைப் புறந்தள்ளி உள்ளது. கடந்த 3 மாத காலமாக மக்களது பிரச்சினைகளை நேரில் சென்று அவதானித்து அவர்களது குறைகளைத் தீர்த்து வருகின்றேன்.

கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களது பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. அதனால்தான் நான் இங்கு களம் காண வந்துள்ளேன். நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களைப் பெற்று பெரு வெற்றி பெறுவோம். இந்தத் தேர்தலுடன் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களால் துடைத்தெறியப்படுவார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கூறிக் கொள்கிறேன்–என்றார். (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

கொரோனாவைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டுள்ள மத்திய நிலையத்தில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

நேற்று முன் தினம் இரவு வரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு 43 பேர் உள்ளானமை உறுதி செய்யப்பட்டிருந்தது. நேற்று மேலும் 8 பேர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றால் 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்பு அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## பேராபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை ஊடக வியலாளர்களை சந்தித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித் தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக் கையில் கூறியவை வருமாறு:-

### பலாலியில் வந்திறங்கிய 60 பேரைத் தேடுகிறோம்

இதுவரை யாழ்ப்பாணத்தில் எந்த நோயாளியும் இனம்காணப் படவில்லை. பலாலி விமான நிலையம் மூலம் எமது மண்ணுக்கு 60க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் வந்திறங்கிப் பல்வேறு இடங்களுக்கும் சென்று வந்துள்ளார்கள். அவர்கள் எவருமே கண்காணிக்கப்படவில்லை. அவர்களின் வீட்டு விலாசங்கள், அவர்கள் தொடர்பான தகவல்களை யாழ்ப்பாணத்தில் உள்ள 14 சுகாதார மருத்துவ அதிகாரிகள் சேகரித்து அவர்களைக் கண்காணித்து அவர்களுக்கு கொரோனோ உள்ளதா எனப் பரிசோதிக்கும் நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளனர்.

### தேவையற்று நடமாடாதீர்கள்!

கொரொனாத் தொற்றானது ஒருநோய்த்தொற்று உள்ளவரிடம் இருந்து மற்றவர்களுக்கு தொற்றும். நோயாளியின் நீர்த்துளிகள் மூலமே அவை பரவுகின்றன. எனவே நாம் நோயில் இருந்து தப்புவதற்கு முதலில் செய்ய வேண்டியது, தேவையற்று வெளியில் நடமாடாமல் வீட்டிலேயே இருப்பதே. அதுவே சிறந்தது. அதற்காகவே அரசு விடுமுறையை விடுத்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணத்தைப் பார்க்கும்போது நோய்க்காக அரசு விட்ட விடுமுறையைப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக விடுக்கப்பட்ட விடுமுறைபோல பலரும் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதை விட புடவைக்கடை, நகைக்கடை என்பவற்றிலும் மக்கள் கூட்டமாகப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் உள்ளார்கள்.

இந்த நோய்த்தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடிந்தவரை மக்கள் கூட்டமாக உள்ள இடங்களுக்குச் செல்லாது தவிர்ப்பதே சிறந்தது. அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதாயின் வீட்டில் உள்ள ஒருவர் மாத்திரம் சென்று அவற்றை கொள்வனவு செய்யவும்.

திருமண வீடு , பிறந்தநாள் கொண்டாட்டம் என்பவற்றில் கலந்து கொள்வதனையும் தவிர்த்து கொள்வது சிறந்தது.

நோய் தொற்று உள்ளதாகச் சந்தேகிப்போர் வீட்டில் தனிமைப் பட்டு இருங்கள்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் நிச்சயமாக வீடுகளில் தனிமைப்பட்டு இருக்கவேண்டும். நோய்த் தொற்று ஏற்பட்டு 14 நாள்களின் பின்னரே அதற்கான அறிகுறிகள் தென்படும். எனவே 14 நாள்கள் கட்டாயம் தனிமைப்பட்டு இருக்க வேண்டும்.

நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் சுகாதார பரிசோதகருக்கு அறிவித்து அவர் மூலம் சுகாதார மருத்துவ அதிகாரிக்குத் தெரியப்படுத்தி அவர் ஊடாகவே வைத்தியசாலைக்கு செல்வது சிறந்தது.

வீட்டில் நோய் தொற்று உள்ளவர் என சந்தேகப்படுபவர் தானே தனிமைப்பட்டு இருப்பது மட்டுமின்றி அவர் உபயோகிக்கும் பொருள்களை அவரே சுத்தம் செய்ய வேண்டும்.

### கை, கால் முகங்களை கழுவுங்கள்

அதேவேளை வீட்டுக்கு வெளியே சென்று வருவோர் வீட்டுக்குள் போக முன்னர் முழங்கை வரையிலும் முழங்கால் வரையிலும் முகத்தையும் நன்றாகக் கழுவி விட்டுச் செல்லவேண்டும். அதேபோன்று அலுவலகத்திற்குச் செல்வோரும் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

### வர்த்தக நிலையங்களை இரு வாரம் பூட்டுங்கள்!

யாழ்ப்பாணத்தில் மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் வர்த்தக நிலையங்களை மூடுவது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வருடன் கதைத்திருந்தோம். அவரும் தான் அது தொடர்பில் வணிகர் கழகத்துடன் பேசுவதாகக் கூறி இருந்தார். குறைந்தது இரண்டு வார காலமாவது வர்த்தகநிலையங்களை மூடுவதனால் மக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

### வடக்கு ஆளுநர் கொழும்பில்

வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்தில் இல்லை. அவர் கொழும்பில் தங்கியுள்ளார். சில விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அவர் தேவை. மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோருகிறோம்.

### வெளிநோயாளர்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த கிளினிக்கு வருவோரைக் கட்டுப்படுத்தும் முகமாக சில தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

அதாவது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்கு இடையில் இடைவெளிகளைப் பேணும் நோக்குடன் நோயாளிகள் காத்திருக்கும் கதிரைகளில் ஒன்று விட்ட ஒரு கதிரையில் நோயாளிகள் உட்காரும் முகமாக ஒன்றுவிட்ட ஒரு கதிரைக்கு ஸ்ரிக்கர் ஒட்டியுள்ளோம். ஸ்ரிக்கர் ஒட்டிய கதிரைகளில் உட்காரவேண்டாம் என அவர்களை அறிவுறுத்தி உள்ளோம். அதேவேளை சுத்திகரிப்பு பணிகளை மூன்றுவேளைகளிலும் மேற்கொள்கின்றோம்.

அத்துடன் பொது இடங்களில் இருக்கும்போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும், வீட்டில் இருக்கும்போது என்ன செய்ய வேண்டும் என அறிவுறுத்தி விழிப்புணர்வுச் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளோம்.

### தேவையற்று வைத்தியசாலை வராதீர்கள்!

அடுத்து, மாதாந்த கிளினிக் வருவோரில் பெரும்பாலானவர்களுக்கு இந்த வைரஸ் இலகுவாக பரவி விடும். அதனால் கிளினிக் வருவோர் கட்டாயமாக மருத்துவரை சந்திக்க வேண்டும் எனும் தேவை இருப்பின் மட்டும் கிளினிக் வரலாம். மருத்துவரை பார்க்கவேண்டிய தேவை இல்லாவிடின் அவர்கள் உறவினர்கள் மூலம் தமது கிளினிக் கொப்பியை கொடுத்து மருந்தை பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோன்று வைத்தியசாலைகளில் தங்கியுள்ள நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளரை கட்டுப்படுத்தி உள்ளோம். ஒரு நோயாளியை ஒருவர் அல்லது இருவர் மட்டுமே பார்வையிட அனுமதிக்க முடியும். அதற்காக மீண்டும் பாஸ் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டு நோயாளர்களும் அவர்களின் உறவினர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

### உபகரணங்கள் போதியளவு இல்லை

கோரோனா நோயாளிகளைப் பரிசோதிப்பதற்கு மருத்துவர்கள், தாதியர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் தேவையான அளவில் கையிருப்பில் இல்லை. தற்போது மந்திகை வைத்தியசாலையில் இரண்டே உள்ளன. அதனை கொண்டு ஒரு நோயாளியையே அணுக முடியும். மேலதிக நோயாளிகள் வந்தால் அவர்களை எவ்வாறு அணுகுவது?

மந்திகைக்கு வைத்தியசாலைக்கு கொரோனா நோயாளி ஒருவர் வந்தால் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றுவதில் உள்ள சிக்கலைகளை மருத்துவ அதிகாரிகளுக்கு அறியப்படுத்தி உள்ளோம்.

தற்போது வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளிகளிடம் கொரோனா நோய் இருக்கும் என சந்தேகப்படுபவர்களுடன் பழக்கங்கள் இருந்ததா என வினாவி அவ்வாறு பழக்கம் இருந்தால் கொரோனா நோயாளிகளைப் பரிசோதிக்க எனப் பிரத்தியோகமாக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் பரிசோதனை செய்கிறோம்.

இதுவரை மந்திகை வைத்தியசாலையில் நான்கு பேர் கொரோனா நோய்ச் சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களைப் பரிசோதித்தபோது அவர்களிடம் அதற்கான அறிகுறிகள் இல்லாததால் அவர்களை வீடுகளுக்குச் செல்ல அனுமதித்துள்ளோம். வீடுகளுக்குச் சென்றவர்களை 14 நாள்கள் வீட்டில் தனிமைப்பட்டு இருக்குமாறே அறிவுறுத்தி உள்ளோம்.

அதேவேளை அவசர சிகிச்சைப் பிரிவில் போதியளவு கட்டில்கள் இல்லை. தற்போது உள்ள கட்டில்கள் அனைத்திலும் வேறு நோயாளர்கள் உள்ளனர். அதேபோன்று செயற்கைச் சுவாசம் வழங்கும் கருவிகள் உள்ளிட்டவையும் போதியளவில் இல்லை.

எனவே யாழ்ப்பாணத்திற்கு கோரோனா வைரஸின் தாக்கம் வருமாயின் அதனை எதிர்கொள்வதற்கு பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும். எனவே வரும்முன்காப்போம். நோய்தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாக்க உரிய நடைமுறைகளை பின்பற்றுங்கள் – என்றனர். (ஐ-07)

## அம்பிகாவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சற்குணநாதனுக்குப் பதிலாகத் திடீரென யாழ். மாநகரசபை மேயர் இ.ஆனல்ட் எப்படி இடம்பெற்றார் என்பது குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பிகா சற்குணநாதன் தாம் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என அறிவித்தமையைத் தொடர்ந்தே இறுதி நேரத்தில் ஆனல்ட் இடம்பெற்றுள்ளார்.

அம்பிகாவின் முடிவு கடந்த திங்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, விண்ணப்பித்தவர்களின் அடிப்படையில் ஆனல்ட் தெரிவாகியுள்ளார். (ஐ)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலை மாவட்ட செயலகத்தில், பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். (ஐ)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான மருத்துவப் பரிசோதனைக்குத் தனியார் வைத்தியசாலைகளுக்குச் சுகாதார அமைச்சால் முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அரசின் தேசிய தொற்று நோயில் வைத்தியசாலை ஊடாகவே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் தனியார் வைத்தியசாலைகளுக்குக் கடும் நிபந்தனைகளுடன் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

தனியார் வைத்தியசாலைகள் கொரோனா வைரஸ் தொற்றுப் பரிசோதனைக்கு கட்டணமாக 6 ஆயிரம் ரூபாவுக்கு மேல் அறவிட முடியாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுதந்திரக் கட்சி,

ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன நேற்று வேட்புமனு தாக்கல் செய்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பா. கஜதீபன் ஆகியோரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், வே.தபேந்திரன், இ.ஆனல்ட், திருமதி ரவிராஜ் சசிகலா ஆகியோரும், ரெலோவின் குருசுவாமி சுரேந்திரனும் போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில், தமிழ் மக்கள் கூட்டணியின் க.வி.விக்னேஸ்வரன், க.அருந்தவபாலன், மீரா அருளானந்தம், தவச்செல்வம் சிற்பரன், கந்தையா இரத்தினகுமார் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிறேமச்சந்திரன், சிங்கபாகு சிவக்குமார் ஆகியோரும், தமிழ் தேசியக் கட்சியின் என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் அனந்தி சசிதரனும் போட்டியிடுகிறார்கள்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், ந.காண்டீபன், வி. மணிவண்ணன், க.சுகாஷ், வாசுகி சுதாகர், ஜெயக்குமார், மா.கணபதிப்பிள்ளை, ஞானகுகணேஸ்வரி, செல்வர் பத்மநாதன் ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

இதேசமயம் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும், அங்கஜன் இராமநாதன் தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், சந்திரசேகரன் தலைமையில் ஜே.வி.பியும், விஜயகாந்த் தலைமையில் சுயேச்சைக் குழுவும் நேற்று வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. (ஐ-07)

## தமிழரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் உறுதியானது.

இதையடுத்து, அவருடன் நெருக்கமாக செயற்பட்ட முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மா.உதயகுமார் அவரது வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அத்துடன், அவர் தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்று வந்த வீடுகளில் வசிப்பவர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டு வருகிறார்கள். புல்லுமலை தொடக்கம் செங்கலடி வரை அவர் வீடுவீடாகப் பிரசாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளார். இதையடுத்து நேற்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தப் பகுதி முழுவதும் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டமையுடன், பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

அத்துடன் இந்த நோயாளி, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு – அங்கொடை ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

சுமார் 61 வயது மதிக்கத்தக்க இந்த கொரோனா தொற்றாளி, 5 நாள்களுக்கு முன்னர் இலண்டனில் இருந்து மட்டக்களப்புக்கு வந்து தங்கியிருந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## புத்தளம்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனை தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் உள்ள 11 பொலிஸ் பிரிவுகளிலும் சிலாபத்தில் உள்ள 7 பொலிஸ் பிரிவுகளிலும் நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுகளிலும் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாரவில, மாதம்பை, கொஸ்வத்த, தங்கொட்டுவ, சிலாபம், ஆராச்சிக்கட்டுவ ஆகிய பொலிஸ் பகுதிகளிலும், புத்தளம் பொலிஸ் பிரிவில், முந்தல், உடப்பு, கற்பிட்டி, நவகத்தேகம, பள்ளம, களுகரகஸ்வெவ, ஆனைமடு, வனாத்தவில்லுவ, சாலியவெவ, நவகத்தேகம ஆகிய பகுதிகளிலும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் அனைத்தும் தாக்கல் செய்யப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்ட பின்னர் தேர்தல் திகதியை நிர்ணயிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலைக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கே ஒத்தி வைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கோரோனா வைரஸ் பரவல் தொடர்பில் அரசியல் கட்சிகள் சில தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரியுள்ளன. அவற்றில் சில தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இது தொடர்பில் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளன. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சமூகப் பொறுப்பு மறந்தோமா?

கொரோனா வைரஸின் பேரபாத்துத் தொடர்பில் பல மட்டங்களிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நிலையில் – போதிய எச்சரிக்கை உணர்வோடு – நாம் இருக்கின்றோமா என்ற கேள்வி எழுப்படுகின்றது.

அதுவும், வடக்கு – கிழக்குத் தமிழர் தாயகம் – அதிலும் வடக்கு மாகாணம் – எத்தகைய ஆபத்தத்தில் இருக்கின்றது, எத்தகைய முன்னேற்பாடுகளைச் செய்திருக்கின்றது என்பவை தொடர்பில் விசனமும் அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றன.

குறிப்பாக மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை வட்டாரங்கள் வெளியிடும் கருத்துக்களும் அளவீடுகளும் அதிர்ச்சி தரும் பரிமாணங்களைக் கொண்டவையாக உள்ளன.

இது தொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண மருத்துவ அதிகாரிகள் தெரிவித்திருக்கும் எச்சரிக்கை மிகமிக முக்கியமாக நோக்கப்பட வேண்டும்.

அவர்கள் சுட்டிக் காட்டும் விடயத்தில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

முதலாவது – கொடூரமான வைரஸ் தாக்குதலுக்கு இலகுவில் உள்ளாகக் கூடிய மிகமிக ஆபத்தான பிரதேசமாக வடக்கு இலங்கை உள்ளது.

இரண்டாவது – அப்படித் தாக்கினால் அதனை எதிர்கொள்ளக் கூடிய முன் ஆயத்த ஏற்பாடுகள் எதுவும் இங்கு இல்லவே இல்லை.

மூன்றாவது – அப்படி அது தாக்காமல் தவிர்ப்பதற்கும், தாக்கினாலும் அதனைத் தீவிரப்பட இடமளிக்காமல் செயற்படுவதற்கும் போதிய விழிப்புணர்வு கொண்டவர்களாவும், பொறுப்புணர்வுமிக்கவர்களாவும் வடக்கு மக்கள் இல்லை.

இந்தத் தகவல் வடக்கு நிலைவரத்தின் ஆபத்தான – பேராபத்தான – கட்டத்தை எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றது.

இந்த ஆபத்திலிருந்து ஒட்டுமொத்த வடக்கு சமூகமும் தப்பி பிழைக்க வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது – செய்யக் கடப்பாடுடையது – யாது என்பதை மருத்துவ நிபுணர்கள் மிகத் தெளிவாக எடுத்தியம்பியிருக்கின்றார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா பரவும் வேகத்துக்கு நிகரான வேகத்தில் இலங்கையில் கொரோனா பரவுகின்றது. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு உள்ள வாய்ப்புகள், வசதிகளில் பற்றி ஒரு வீதம் தன்னும் இங்கு கிடையாது என்ற அப்பட்டமான – யதார்த்த – நிலைவரத்தை அவர்கள் விளங்குகின்றார்கள்.

அந்த ஆபத்தை எண்ணுகையில் விதிர்விதிர்க்கின்றது. ஆனால், நமது மக்கள் எவரும் நம்மைச் சூழ்ந்து நிற்கும் இந்தப் பேராபத்தின் மோசநிலை குறித்து – அழிவு நிலைமை பற்றி – மெய்யுணர்ந்தவர்களாக இல்லை.

ஒரு கொரோனா நோயாளி ஊடாக குறுகிய காலத்தில் புதிதாக இரு நூறு நேயாளிகள் உருவாகக் கூடிய பேரச்ச நிலைமை உள்ளது. ஆனால் ஏதோ அந்தத் தொற்று நமது பிரதேசத்துக்கு வராது, நமக்கு ஏற்படாது என்ற மெத்தனப் போக்கில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்பின்றிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அப்படியில்லாவிட்டால் வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற விட்டேத்தியான போக்கில் நடந்து கொண்டிருக்கின்றோம்.

மக்களின் நடமாட்டத்தை அடியோடு குறைத்து, வீடுகளுக்குள் முடங்கி, இந்தத் தொற்றுப் பரவுவதற்கான வாய்ப்புகளை மூடி அடைத்து, எம்மையும் காத்து, நமது சமூகத்தையும் காக்க நாங்கள் முன்வரவேண்டும். கடமையுணர்ந்து, பொறுப்பை விளங்கி, எம்மை மீறிய மோச நிலைமையைச் சமாளிப்பதற்கு முற்கூட்டிய எச்சரிக்கை உணர்வோடு நாம் செயலாற்ற வேண்டும்.

மெத்தப்படித்தவர்கள் என எம்மை நாமே மெச்சிக் கொள்ளும் ஓர் உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அதற்குரிய தகைமையோடு இவ்விடயத்தில் நாங்கள் இதுவரை செயற்படவில்லை என்பது துரதிஷ்டகரமான உண்மை.

இந்தத் தவறுக்காக நாம் பெருவிலை கொடுக்க வேண்டிய மிக மோச நிலைமை வரலாம்.

இது தொடர்பில் சரியான விழிப்புணர்வை – கடமையுணர்வை – நம் மக்கள் மத்தியில் ஏற்படுத்த தவறிய பெரிய அபவாதம் – குற்றச்சாட்டு – நாங்கள் உட்பட அனைத்து ஊடகங்களையும் சாரும் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

இந்த விடயத்தில் எங்களை – எமது மக்களை – சரியாக வழிப்படுத்தி, நெறிப்படுத்தும் உரிய தலைமைகள், சீரிய வழிகாட்டிகள், சமூகச் சிற்பிகள் இங்கு இல்லை என்பதும் கூட மறுக்க வொண்ணா உண்மைதான்.

கொரோனாவை எதிர்கொள்ள எம்மை – எமது நடமாட்டத்தை – சுருக்கி, உரிய வழிகாட்டிகளின் பரிந்துரைகளை நாமாக முழுமையாகப் பின்பற்றி, சமூகக் கூட்டுப் பொறுப்பை நிறைவு செய்வோம்.

# கூட்டமைப்பினர் நேற்று வன்னியிலும் வேட்புமனு



வவுனியா, மார்ச் 19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டத்துக்குரிய வேட்புமனுக்கள் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டன.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களுக்கான கையொப்பங்களை இட்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கற்குழி சிந்தாமன்னி பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டு முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்தில் தமது வேட்புமனுக்களைக் கையளித்தனர்.

வன்னி மாவட்டத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பில் – செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், செ.மயூரன் ஆகியோரும், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்) சார்பில் – ஜி.ரி.லிங்கநாதன், க.சிவலிங்கம் ஆகியோரும், இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் – சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.சிவமோகன், சாந்தி சிறிஸ்கந்தராசா, ப.சத்தியலிங்கம் ஆகியோரும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிணற்றினுள் தவறி விழுந்து நல்லூர் யுவதி பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 19

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது கயிறு காலில் தடுக்கி கிணற்றுக்குள் வீழ்ந்த இளம் யுவதி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் செம்மணி வீதி, நல்லூரடியை சேர்ந்த மதுரகுமார் கஸ் தூரி(வயது – 25) என்ற இளம் யுவதியே உயிரிழந்துள்ளார்.

நல்லூரடியில் உள்ள தனது வீட்டில் இந்த யுவதி நேற்றுமுன்தினம் மாலை கிணற்றில் தண்ணீர் அள்ளியுள்ளார். இதன்போது கப்பியின் கயிறு காலில் சிக்குண்டத்தில் தண்ணீர் வாளியுடன் இழுபட்டு யுவதி கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.

யுவதியின் அவலக் குரலைக் கேட்ட அயலவர்கள் கிணற்றுக்குள் இருந்து அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும் யுவதி ஏற்கனவே இறந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற் கொண்டார். (ஐ – 07)

# சுழிபுரத்தில் கடற்றொழிலாளர்களின் பாதையை ஆக்கிரமித்தது கடற்படை!

## மீட்டுக்கொடுத்தார் சட்டத்தரணி சுகாஷ்



யாழ்ப்பாணம், மார்ச் 18

சுழிபுரம் – சவுக்கடியில், கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்லும் பாதையை அபகரித்து தமது முகாமை விஸ்தரிக்க முற்பட்ட கடற்படையினரின் செயற்பாடு முறியடிக்கப்பட்டது.

சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து சட்டத்தரணி கே.சுகாஸ் மேற்படி கடற்படையின் அபகரிப்பை தடுத்து நிறுத்தியுள்ளார்.

சுழிபுரத்தை சேர்ந்து 300 இற்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் சவுக்கடி கடற்கரையில் தமது வாழ்கைளை அமைத்து கடற்றொழில் செய்து வருகின்றனர். இவர்கள் பூர்வீகமாக இந்த இடத்தில் இருந்தே தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தாக்கத்தினால் மக்களின் கவனம் திசை திரும்பியுள்ள சூழலை தமக்கு சாதமாக பயன்படுத்திய சிறிலங்கா கடற்படையினர், மேற்படி தொழிலாளர்களின் தொழிலுக்காக கடலுக்கு செல்லும் கடற்கரை வீதியை ஆக்கிரமித்து நேற்று முன்தினம் முள்ளுக்கம்பி வேலி அமைத்தனர்.

இந்த வேலிக்குள் கடற்றொழிலாளர்களின் வாடி களும் அகப்பட்டுக்கொண்டன.

இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இவ்விடயத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் சட்டத்தரணி கே.சுகாஷின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை தொழிலாளர்கள் மற்றும் அப்பிரதேச மக்கள் சகிதம் சுகாஷ் அந்த இடத்திற்குச் சென்றார்.

அங்கு முகாமிட்டுள்ள கடற்படைப் பொறுப்பதிகாரியிடம் நிலைமையை விளக்கிய அவர், அந்தப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்வீக நிலம் என்பதையும் அது தொழிலாளர்களின் பயன் பாட்டுக்கு உரியது என்பதையும் எடுத்துக்கூறினார்.

இனிமேல் அங்கு எல்லையிடவோ முள்ளுக் கம்பி வேலியிடவோ வேண்டாம் என கடற்படையினருக்கு கூறிய சட்டத்தரணி சுகாஷ், மீறி செயற்பட்டால் தாங்கள் நீதிமன்றுக்குச் செல்வதுடன் மக்களோடு இணைந்து ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

இதன்போது, அது அரச காணி எனவும் அரசு தமக்கு அதை வழங்கியதால் தாம் எல்லையிட்டனர் எனவும் கடற்படை அதிகாரி தெரி வித்தார். எனினும், அது மக்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலம் என்பதால் கடற்படையினருக்கு வழங்க அனுமதிக்க முடியாது என சுகாஷ் உறுதிபடக் கூறினார்.

இது தொடர்பாக வலி.மேற்கு பிரதேச செயலாளர் ஊடாக தங்களுக்கு அறிவிக்குமாறும் தாம் எல்லை யிட்டு வேலி அமைக்கும் பணியை கைவிடுவதாக வும் கடற்படையினர் தெரிவித்தனர். தமது பாதை உரித்தை மீளப்பெற்று வழங்கிய சட்டத்தரணியும் வேட்பாளருமான சுகாஷிற்கு தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

**நாளை 20.03.2020 - வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம்: திருவோணம் மு.இ 7.31 வரை
திதி : ஏகாதசி மு.ப 9.04 வரை
இராகுகாலம் : 10.47 – 12.17
சுப நேரம் : 6.17 – 7.47

# தமிழ்த்தேசத்தை அழிப்போருக்கு இந்தத் தேர்தலில் முற்றுப்புள்ளி!

## கூறுகிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசத்தை அடியோடு அழிக்கும் நோக்கில் இதுவரை காலமும் பிழையான வழிக்கு தள்ளிச் சென்றவர்களுக்கு இந்தத் தேர்தல் முற்றுப்புள்ளி வைக்கும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பு மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழர் காங்கிரஸ் கட்சியின் ஊடாக சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளோம்.

போர் முடிவடைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அமைத்து 10 வருடங்கள் கழிந்துள்ளன. இந்த 10 வருடங்களில் நாங்கள் தமிழ் மக்களுக்கு பல கருத்துக்களைக் கூறி வந்துள்ளோம்.



குறிப்பாக தமிழ்த் தேசத்துக்கு வரப்போதும் ஆபத்துக்கள் தொடர்பான முன்கூட்டியே சுட்டிக்காட்டி வந்துள்ளோம். தமிழ் தேசத்துக்கான ஆபத்துக்கள் தொடர்பில் நாங்கள் கூறிவந்த அத்தனை கருத்துக்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில்தான் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளோம். எம்மைப் பொறுத்த வரை புதிய தலைமைத்துவம் தமிழ்த் தேசத்துக்கு அத்தியாவசியமான ஒன்றாக உள்ளது.

அதை கடந்த 10 வருடங்களாகச் சொல்லிவந்தோம். இதனை இன்று மக்களும் தாங்களாகவே அனுபவ ரீதியான முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு வந்துள்ளார்கள்.

அந்த புதிய தலைமைத்துவத்தை நேர்மையாகவும், கொள்கை ரீதியாக இறுக்கமாகவும், தூய்மையாகவும் வழங்குவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாரா உள்ளது.

இந்தவகையில் எமது கட்சியின் வேட்பாளர்கள் தமிழ்த் தேசத்தின் 5 தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய 8 மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றார்கள். அந்த அனைத்து மாவட்டங்களிலும் நேற்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எம்மை பொறுத்து வரை இந்தத் தேர்தல் புதிய ஓர் ஆரம்பமாக இருக்கும்.

தமிழ்த் தேசம் கடந்த 10 வருடங்களாக சரியான தலைமைத்துவம் இல்லாமல், பிழையான வழிக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் இந்தத் தேர்தலின் முடிவுகள் அந்த பிழையான தலைமைத்துவத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, தெளிவான, உறுதியான, தமிழ் தேசத்தில் நலன்கள் சார்ந்து புதிய பாதை ஒன்றுக்கு வழிவகுக்கும்.

அந்தப் புதிய பாதைக்கான தலைமையை நாங்கள் கொடுப்போம். இதற்கான முன்கூட்டிய தமிழ் மக்களுக்கு நன்றி கூறிக் கொள்ளுகின்றோம் – என்றார். (ஐ – 07)

## பஸ் நிலையத்தில் கை கழுவ ஏற்பாடு!



கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் ஹற்றன் பகுதியிலுள்ள வர்த்தக இளைஞர்கள் சிலர், ஹற்றன் பஸ் தரிப்பிடத்தில் கைகளைச் சுத்தமாகக் கழுவுவதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குச் சுகாதாரப் பிரிவினரால் மக்களுக்குப் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி கைகளை உரிய வகையில் கழுவிச் சுத்தமாக இருப்பதன் மூலம் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள் ளலாம் என்றும், வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே கிருமி ஒழிப்பு நடவடிக்கையின் ஓரங்கமாக ஹற்றன் நகர இளைஞர்கள், தமது சொந்த நிதியில் தண்ணீர்த் தாங்கியையும், கைகளை கழுவுவதற்கான உபகரணத்தையும், தேவையான பொருள்களையும் பஸ் நிலையத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இலங்கையிலிருந்துகொரோனா வைரஸ் தொற்று முழுமையாக நீங்கிவிட்டது எனச்சுகாதார அமைச்சால் அறிவிப்பு விடுக்கப்படும் வரை ஆரம்பமான இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கும் என இளைஞர்கள் தெரிவித்தனர்.

## 'பல்டி' அடித்த கோடீஸ்வரனுடன் அம்பாறையில் நேற்று வேட்புமனு



அம்பாறை, மார்ச் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்று புதன்கிழமை தாக்கல் செய்தது.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் ஆகியோருடன், அண்மையில் கட்சி தாவிய கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ரெலோவிலிருந்து பல்டியடித்த கவீந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தவராஜா கலையரசன், ஆ.தமிழ் நேசன், ஆர்.சயனொளிபவன், சின்னையா ஜெயராணி, செல்வராஜா கணேசானந்தம், எஸ்.சுந்தரலிங்கம், தாமோதரம் பிரதீபன், முருகுப்பிள்ளை ரவிகரன், எம்.பரணிதரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு இடங்களை வெற்றி கொள்ளும் என கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில்-**

இரட்டைப்பெரியகுளத்திலிருந்து பூ ஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் யோசப் படை முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், பூ ஓயா இராணுவ முகாம், Recbo North, கோவில் புதுக்குளம் கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடையிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## முகக்கவசத்துக்கு வரி நீக்கம்

கொழும்பு, மார்ச் 19

இறக்குமதி செய்யப்படும் முகக்கவசம் மற்றும் தொற்று நீக்கிகளுக்கான சகல வரிகளையும் நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இதற்காக வரிகள் நீக்கப்படுகின்றன.

அதன்படி, இந்த இறக்குமதிப் பொருள்கள் சிறப்பு வர்த்தகப் பொருள்கள் வரிச் சட்டத்திற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.


SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

### தூக்கில் தொங்கிச் சாக மணித்தியாலங்கள் மட்டுமே இருக்கையில்

# நிர்பயா கொலைக் குற்றவாளியிடமிருந்து விவாகரத்துக் கேட்கிறார் அவர் மனைவி

புதுடில்லி, மார்ச் 19

நிர்பயா பாலியல் கூட்டுவல்லுறவுக்கொலையாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட உள்ள நிலையில் அவர்களில் ஒருவரின் மனைவி விவாகரத்துக் கோரியிருக்கிறார்.



தனது கணவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் அவரது விதவையாக வாழத் தான் தயாராக இல்லை என்று புனிதா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கொலையாளிகள் நால்வருக்கும் நாளை மரண தண்டனை நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் குற்றவாளி அக்‌ஷை தாகூர் என அழைக்கப்படும் அக்‌ஷை குமார் சிங்கின் 29 வயதான மனைவி புனிதா சிங் நீதிமன்றத்தில் விவாகரத்து மனுவைத் தாக்கல் செய்தார்.

பிஹார் மாநிலத்தின் அவுரங்காபாத் குடும்ப நல நீதிமன்றில் அவரது மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டது. புனிதா அக்சை குமார் சிங்கிற்கு 9 வயது மகன் உள்ளார்.

நீதிபதி ராம் லால் சர்மா மனுவை விசாரித்தார்.

புனிதாவின் 36 வயதுக் கணவனான அக்சை தனது இறுதி மணித்துளிகளை எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில், அவரிடமிருந்து விவாகரத்துக் கோரும் மனு மீதான விசாரணையை ஒரு நாளுக்கு, அதாவது இன்று வெள்ளிக்கிழமைக்கு நீதிபதி தள்ளி வைத்துள்ளார் என்று புனிதாவின் சட்டத்தரணி முகேஸ் குமார் சிங் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டு மே மாதம் இவர்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது, ஒரே வருடத்தில் 2011ஆம் ஆண்டு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது, திருமணமான காலப் பகுதியில் அக்சை புதுடில்லியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார் என்று புனிதாவின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்‌ஷயின் கருணை மனுவும் இந்திய ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தன்னுடைய எஞ்சிய வாழ்நாள்களை ஒருவன் புணர்வுக் குற்றவாளியின் விதவையாகக் கழிக்க விருப்பமில்லாத தன் காரணமாகவே விவாகரத்து மனுவைத் தான் தாக்கல் செய்தார் என்று புனிதா தெரிவித்தார்.

இதற்கிடையில் தன்னுடைய இரண்டாவது கருணை மனு மீதான மீளாய்வை இந்திய ஜனாதிபதி இன்னும் முடிக்கவில்லை என்பதால் மரண தண்டனையை நிறுத்தி வைக்குமாறு கேட்டு குற்றவாளிகள் நால்வரில் மூவர் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். இது தொடர்பில் பதிலளிக்குமாறு திஹார் சிறை நிர்வாகத்திற்கு நீதிமன்றம் அவசரக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.



## கொரோனா அச்சத்தின் நடுவிலும் தமிழகத்தில் நேற்றுப் போராட்டம்

சென்னை, மார்ச் 19

இந்திய குடியுரிமைச் சட்டம் மற்றும் தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம் என்பவற்றை எதிர்த்து தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தி தமிழகத்தில் நேற்று பரவலான சிறை நிரப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்குதல் அச்சத்துக்கு மத்தியிலும், மக்கள் கூட்டம் கூடுவதைத் தவிர்க்க வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலும் இந்தப்போராட்டம் எழுச்சியுடன் நடத்தப்பட்டது. ஒவ்வொரு போராட்டத்திலும் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். சில இடங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் சார்பாக தமிழக முழுவதும் மாவட்ட தலைநகரங்கள் உள்ளிட்ட 36 இடங்களில் ,ந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருநெல்வேலியில் நடத்தப்பட்ட போராட்டத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்களில் இருந்தும் வந்திருந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களும் பங்கேற்றிருந்தனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலை அருகே போராட்டம் நடந்தது. அங்கு உரையாற்றிய தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைவர் ஷம்சுல் லுஹா "தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டுவிட்டால் மாநில மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டு அகதி பட்டியலில் இணைக்கப் படுவார்கள்" என்றார்.

"ராஜஸ்தான், பஞ்சாப், டில்லி, மேற்குவங்கம், மத்திய பிரதேசம், தெலுங்கானா, கேரளா, ஆந்திர, பாண்டிச்சேரி, பீகார் உள்ளிட்ட பிற மாநிலங்களில் மாநில மக்களின் உரிமையை காப்பதற்காக சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. அதுபோல் தமிழக மக்களின் உரிமையை காக்க சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். 80 நாட்களை கடந்து தமிழகத்தில் இப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு மாநில அரசு செயல்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் நடந்த போராட்டத்தின்போது இளைஞர்கள் சிலர் இந்திய தேசியக் கொடிகளுடன் தெப்பக் குளத்தினுள் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது பதற்றம் ஏற்பட்டது.

பின்னர், பொலிஸார் அவர்களுடன் பேசி குளத்திலிருந்து அவர்களை வெளியே வரவழைத்தனர்.

## கேரளப் பொலிஸாரின் கொரோனா வீடியோவுக்கு பாராட்டு மழை!

உலகமே கொரோனா வைரஸ் பீதியால் அல்லாடி வரும் நிலையில் மக்கள் மத்தியில் கைகழுவும் பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக இந்தியாவின் கேரள மாநிலப் பொலிஸார் வெளியிட்டுள்ள பாடலுடன் கூடிய நடன அசைவு வீடியோ இப்போது மிக வேமாகப் பரவி வருவதுடன் பாராட்டையும் பெற்று வருகின்றது.



பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டசபை உறுப்பினர்களும் தமது அனைத்து அரசியல் நிகழ்ச்சிகளையும் நிறுத்தி விட்டு, கொரோனா வைரஸ் தாக்குதல் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்று அதிகமாக பரவாத வகையில் கையாள வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கையான கைகழுவும் பழக்கம் தொடர்பாக நடனத்தின் வாயிலாகக் கேரளா மாநிலப் பொலிஸார் வெளியிட்டுள்ள வீடியோ சமூகவலைத்தளங்களைக் கலக்கி வருகின்றது.

கைகளை எப்படிச் சுகாதாரமான முறையில் வைரஸ் தொற்று ஏற்படாத வகையில் கழுவ வேண்டும் என்று விளக்கும் அங்க அசைவுகளை நடன அசைவுகளுடன் இணைந்து பின்னணிப் பாடலுடன் இந்த வீடியோ தயாரிக்கப் பட்டுள்ளது.

சீருடை அணிந்த பொலிஸாரே இந்த நடன அசைவுகளைச் செய்கிறார்கள் என்பது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளதுடன் இந்த முயற்சியையும் பாராட்டி வருகிறார்கள்.

## சாணம் கிலோ ரூ. 500 கோமியம் லீற்றர் 500

### கொரோனாவால் வந்தது மவுசு

கொல்கத்தா, மார்ச் 19

கொரோனா எனப்படும் கொவிட் 19 வைரஸ் உயிரைக் கொல்லும் என்று உலக நாடுகள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருக்க, இந்தியாவில் அந்த வைரஸ் சிலருக்கு அமோக வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறது.

கொல்கத்தாவை சேர்ந்த மகபூப் அலி தனது இரண்டு மாடுகளிலும் இருந்து கிடைக்கும் சாணி மற்றும் கோமியத்தை பெரும் கிராக்கிக்கு மத்தியில் விற்பனை செய்து வருகிறார்.

கொரோனா வைரஸின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க மாட்டுக் கோமியத்தைக் குடித்துச் சாணியை உடலில் பூசிக்கொண்டால் போதும் என்கிற தகவல் சிலரால் பரப்பப்பட்டதைத் தொடர்ந்து அலி தனது வியாபாரத்தை கனகச்சிதமாகத் தொடங்கினார்.

மாடு ஒன்றின் பின்புறம் நின்று அது சிந்தும் கோமியத்தை அப்படியே கைகளில் ஏந்திக் குடிப்பது மற்றும் சாணியால் நிரப்பப்பட்ட தொட்டிக்குள் முக்கி எழுவது போன்ற வீடியோக்கள் வட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களில் பரவியதைப் பார்த்ததன் பின்னரே தனக்கு இந்த யோசனை தோன்றியதாக அலி தெரிவித்தார்.

தனது இரண்டு மாடுகளின் கோமியத்தையும் லீற்றர் ஒன்று இந்திய மதிப்பில் ரூபாய் 500க்கும் மாட்டுச் சாணத்தை இந்திய மதிப்பில் கிலோ ரூபாய் 500க்கும் விற்பனை செய்து வருவதாக அவர் கூறினார்.

கொரோனா வைரஸிடம் இருந்து தப்பிக்க பலர் தன்னிடம் கோமியம், மாட்டுச்சாணத்தை வாங்கிச் செல்வதாகவும் மாட்டின் பாலில் இருந்து கிடைக்கும் வருமானத்தை விட இதில் பல மடங்கு வருமானம் தனக்கு கிடைப்பதாகவும் அவர் கூறினார்.

மாட்டு சாணம் மற்றும் கோமியம் கொரோனா வைரஸை குணமாக்கும் என்று எந்த ஆய்வறிக்கையும் கூறாத நிலையில் இந்த மூட நம்பிக்கை அலி போன்றவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

## 3,000 பேர் கண்காணிப்பில்

தமிழகத்தில் கரோனா வைரஸ் அறிகுறி சந்தேகத்தின் பேரில் 2,984 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

சென்னையில் நேற்றுச் செய்தியாளர்களிடம் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## கொரோனா மருந்து தமிழகமும் கண்டுபிடிக்கும்

சென்னை, மார்ச் 19

கொரோனா வைரசை அழிக்க மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தமிழக மருத்துவர்களும் ஆய்வு செய்து வருகிறார்கள் என்று சட்டசபையில் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல் தெரிவித்தார்.

சட்டசபையில் நேற்றுக் கேள்வி நேரத்தின் போது எதிர்க் கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரசுக்கு ராஜஸ்தான் மாநிலத்திலும், அமெரிக்காவிலும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இது உண்மையா என்பதை அமைச்சர் விளக்க வேண்டும் என்றார் ஸ்டாலின்.

"இந்த நோயை தடுப்பது குறித்து தமிழக மருத்துவர்களும் ஆய்வு செய்து வருகிறார்கள். புதிய மருந்து இன்னும் கண்டுபிடிக்கபடவில்லை என்பதை தெரிவித்தேன்.

என்றாலும் மருத்துவர்கள் செய்துவரும் ஆய்வில் நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்க்கிறோம். விரைவில் நல்ல செய்தி கிடைக்கும் என்று காத்திருக்கிறோம்." இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் இந்திய மத்திய அரசு மெத்தப்போக்கு

### கண்டிக்கிறது காங்கிரஸ் கட்சி

புதுடில்லி, மார்ச் 19

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு மெத்தனப்போக்கை கடைப்பிடித்து வருவதாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி கண்டித்துள்ளது.

அந்தக் கட்சியின் தேசிய செயற்குழுவின் நிரந்தர உறுப்பினராக பதவி வகிக்கும் ரந்தீப் சிங் சுர்ஜேவாலா, தனது டுவிட்டர் பக்கத்தில் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் சுமார் 3 லட்சம் பல் மருத்துவமனைகள் இயங்கிவருகின்றன. உமிழ்நீர் துளி வழியாக கொரோனா வைரஸ் பரவும் என்னும் நிலையில் இந்தப் பல் மருத்துவமனைகள் மூலம் கொரோனா தொற்று அதிகமாக பரவும் வாய்ப்புகள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அப்படியிருந்தபோதும் பல் மருத்துவமனைகளை மூடுவதற்கு இந்திய அரசு இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

"இனியாவது விழித்துக் கொள்ளுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து, (அவசரக்கால சிகிச்சை தவிர) அனைத்து பல் மருத்துவமனைகளையும் மூடுங்கள்" என மத்திய அரசிடம் அவர் வலியுறுத்தினார்.

## 147 பேருக்கு இதுவரையில் பாதிப்பு

இந்தியாவில் நேற்றும் 10 பேருக்குப் புதிதாக கொரோனா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டதை அடுத்து பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 147 ஆக அதிகரித்தது. 24 வெளிநாட்டினார் உட்பட 137 பேர் ஏற்கனவே நோய்த்தொற்றுக்கு உள்ளாகியமை கண்டறிப்பட்டிருந்தது.

இதுவரையில் 15 பேர் நோயின் தாக்கத்தில் இருந்து குணமடைந்துள்ளனர் என்றும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக மகாராட்ஷிரா மாநிலத்தில் 41 பேருக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதில் மூவர் வெளிநாட்டினர். கேரளாவில் 25 இந்தியர்களுக்கும் இரு வெளிநாட்டினருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஹரியானா, உத்தரப் பிரதேசத்திலும் பாதிப்பு உண்டு.

# 9 ஆயிரத்தை எட்டியது இறப்பு

## 2 லட்சத்தை தாண்டியது கொரோனா பாதிப்பு

வோஷிங்ரன், மார்ச் 19

உலக நாடுகளை உலுக்கி வரும் கொரோனா எனப்படும் கொவிட் 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று இரவு அறிவிக்கப்பட்ட தன்படி 9 ஆயிரத்தைத் எட்டுகின்றது.

நள்ளிரவு வரையில் 8 ஆயிரத்து 794 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 2 லட்சத்து 13 ஆயிரத்து 669 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 6 ஆயிரத்து 636 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதன் காரணமாக உயிரிழப்பு எண்ணிக்கை அடுத்து வரும் நாள்களின் மேலும் அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 10 நாள்களில் நோய்ப் பரம்பல் வீதம் சடுதியாக அதிகரித்துள்ளதாக மருத்துப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியாவில் நேற்று ஒரே நாளில் மட்டும் 12 பேர் இந்த நோயத் தாக்கத்தால் உயிரிழந்தனர். சீனாவில் 11 பேரும் அமெரிக்காவில் 7 பேரும் தென்கொரியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் தலா 3 பேரும் நேற்று ஒரே நாளில் உயிரிழந்திருக்கிறார்கள்.

அதேபோன்று நேற்று ஒரே நாளில் மட்டும் 878 பேருக்கு கொரோனா தொற்கு ஏற்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஜேர்மனியில் 510 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடுத்து வரும் நாள்களில் பாதிப்பு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்றே எதிர்வுகூறப்படுகின்றது.

## சிம்பன்சிக்கு கொரோனா பரவாதிருக்க நடவடிக்கை

மனிதர்கள் மத்தியில் மிகத் தீவிரமாகக் கொரோனா பரவி வரும் நிலையில் மனிதர்களையொத்த குணாதிசயங்களைக் கொண்ட சிம்பன்சிக் குரங்களுக்கும் இந்த வைரஸ் பரவாமல் இருப்பதற்கு அமெரிக்காவில் உள்ள மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

காஸ்கோட் மலைப் பகுதியில் இருக்கும் சரணாலயத்தில் உள்ள 10 சிம்பன்சிகளுக்கும் நோய்த் தொற்று ஏற்படாமலிருப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் மனிதர்களிடமிருந்து சிம்பன்சிகளுக்கு வைரஸ் பரவியமை கண்டறியப்பட்டதை அடுத்தே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சுனாமியோடு ஒப்பிட்டு மலேசியா எச்சரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 19

மலேசியாவில் கொரோனா வைரஸ், சுனாமி போன்ற அலையை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக அந்நாட்டின் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. எனவே பொதுமக்கள் பொது நடமாட்ட கட்டுப்பாடுகளை முறையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் அமைச்சு அறிவுறுத்தி உள்ளது.

மலேசியாவில் கொரோனா வைரஸ் பாதிப்புடன் உள்ளவர்களின் எண்ணிக்கை இன்றும் அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் மேலும் 117 பேருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 790 ஆக எற்றம் கண்டுள்ளது.

இதேவேளை, 60 பேர் மருத்துவ சிகிச்சைக்குப் பின் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து முழுமையாக குணமடைந்துள்ளனர் என்று மலேசிய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே பொது நடமாட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது நடவடிக்கை பாயும் என மலேசிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இத்தகைய குற்றங்களை புரிவோர்க்கு ஆயிரம் மலேசிய ரிங்கிட் அபராதம் அல்லது ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்படும் என சுகாதார அமைச்சர் டாக்டர் அதம் பாபா தெரிவித்துள்ளார்.

மலேசியர்கள் அடுத்த இரு வாரங்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ள பொது நடமாட்ட கட்டுப்பாடுகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் நூர் ஹிஷாம் அறிவுறுத்தி உள்ளார்.

இல்லையெனில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரிக்கும் என்றும், கட்டுப்பாடுகளைப் புறக்கணித்தால் சுனாமி போன்ற மூன்றாம் அலையை கொரோனா ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

"அரசு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ள நிலையில், அவற்றை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகளை மக்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். அனைவரும் கூடுமானவரை வெளியே செல்லாமல் வீட்டிலேயே இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சிறிய வாய்ப்பும் சக்தியும் மலேசியாவுக்கு கிடைத்துள்ளது. ஒவ்வொரு தனி நபரும் தனது சுய நலனுக்காகவும், குடும்பத்தின் நலன்களுக்காகவும் செயல்பட வேண்டியுள்ளது. எனவே நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் பொறுப்பேற்று சுகாதார அமைச்சுக்கு உங்களது பங்களிப்பை அளிக்க வேண்டும்," என்றார் அவர்.

## எல்லைகளை மூடியது ஐரோப்பிய ஒன்றியம்

லண்டன், மார்ச் 19

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்காக அடுத்த 30 நாடுகளுக்கு எல்லைகளை மூடுவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தது.

ஒன்றிய நாடுகளின் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்ட இணக்கத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வந்தது. இந்தத் தடை அறிவிப்பை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேராத நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றிய நாடுகளுக்குள் நுழைவது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயணத் தடை உடனடியாக நடைமுறைக்கு வருவதாக ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மேர்க்கல் தெரிவித்தார்.

நோய்த் தொற்றுப் பரவாமல் தடுப்பதற்காக எந்தவொரு தியாகத்தைச் செய்வதற்கும் ஐரோப்பிய நாடுகள் தயாராக இருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

கொரோனாவின் தாக்கத்தால் ஏற்கனவே வீழ்ச்சியைச் சந்தித்துள்ள பொருளாதாரம் எல்லைகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து மேலும் வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

இதற்கிடையில் கனடாவுடனான தனது எல்லையை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே இனித் திறப்பது என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்தவற்றுக்கு எல்லையைத் திறப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த முடிவு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் கூறினார்.

## கொரோனா இல்லா நாடு வடகொரியா!

வடகொரியாவில் கொரோனா பாதிப்பு இல்லை என்று அந்த நாட்டு அதிபர் கிம் ஜாங் உன் அறிவித்தார். 30 நாள்கள் தனிமைப்படுத்தல், மூடிய எல்லைகள், சீனாவுடனான வர்த்தகம் இடைநிறுத்தம் ஆகிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து தமது நாட்டில் கொரோனா பாதிப்பு ஏற்படவில்லை என்று அவர் தெரிவித்தார். வடகொரியாவின் அண்டை நாடான சீனாவில் 3 ஆயிரத்து 200 பேர் இறந்த நிலையில் வடகொரியாவின் அறிவிப்பு நம்பத்தகுந்ததல்ல எனப்படுகிறது.



## கொரோனாவை வென்ற பாட்டி!

தெஹ்ரான், மார்ச் 19

ஈரான் நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் மிகத் தீவிரமாக இருந்துவரும் நிலையிலும் அங்கு 103 வயதுப் பாட்டி ஒருவர் கொரோனா நோயின் பிடியிலிருந்து மீண்டுவந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்.

நாட்டில் கொரோனாவின் பாதிப்பால் ஆயிரத்து 135 பேர் உயிரிழந்துள்ளனர். 17 ஆயிரத்து 361 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

வயோதிபர்களையும் பலவீனமானவர்களையுமே இந்த நோய் அதிகம் தாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் 103 வயதிலும் கொரோனாவில் இருந்து மீண்ட பாட்டியின் படம் இப்போது மிக வேகமாப் பரவி வரு கின்றது.

கடந்தவாரம் இந்தப் பாட்டி நோய்த் தாக்கத்துக்கு உள்ளானார். செம்னான் நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் குணமடைந்து வீடு திரும்பிவிட்டார் என்று மருத்துவமனை அறிவித்திருந்தது. பாட்டியின் ஒளிப் படம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது.

## ஒலிம்பிக் தீபத்தை எடுத்துவர தனி விமானம் நேற்று புறப்பாடு

டோக்கியோ, மார்ச் 19

கிரீஸ் நாட்டிலிருந்து ஒலிம்பிக் தீபத்தை எடுத்து வருவதற்காக ஜப்பானிலிருந்து தனி விமானம் நேற்று அனுப்பப்பட்டது.

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் ஜுலை மாதம் 24ஆம் திகதி ஜப்பானில் தொடங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அதனைப் பிற்போடவேண்டி ஏற்படும் என்ற சூழல் நிலவுகின்ற போதும் போட்டியை ஒத்தி வைக்காமல் அதனை நடத்துவது என்பதில் ஜப்பான் பிடிவாதமாக உள்ளது.

போட்டிகள் ஆரம்பிப்பதற்கிடையில் கொரோனா கட்டுக்குள் வந்துவிடும் என்று ஜப்பான் நம்புகின்றது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக கிரீஸில் இருந்து பாரம்பரிய ஒலிம்பிக் தீபத்தை எடுத்துவருவதற்கான விமானம் நேற்றுப் புறப்பட்டது.

ஒலிம்பிக் போட்டிகள் கிரீஸ் நாட்டிலேயே தொடங்கின என்பதால் சம்பிரதாயப்படி ஒலிம்பிக் தீபம் அங்கேயே ஏற்றப்பட்டு உலகம் முழுவதும் வலம் வருவது வழக்கம்.

இதற்கமைவாக இந்தத் தடவையும் பாரம்பரிய முறைப்படி கடந்த 12ஆம் திகதி கிரீஸில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது.

அதை எடுத்துவருவதற்காக ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து புறப்பட்ட விமானத்தில் ஜப்பான் நாட்டு விளையாட்டுத்துறைப் பிரதிநிதிகள் எவரும் இடம்பெற்றிருக்கவில்லை. கொரோனா அச்சம் காரணமாகவே அவர்கள் செல்லவில்லை.

விமான நிலையப் பணியாளர்கள் சிலர் மட்டுமே விமானத்தை கையசைத்து அனுப்பி வைத்தனர்.



துபாயில் வசிக்கும் தமிழகச் சிறுவனுக்கு அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் 1 மில்லியன் டொலர் பரிசு விழுந்தள்ளது.

கனகராஜா 27 ஆண்டுகளாகத் துபாயில் வசித்து வருகின்றார். பாடசாலைகளுக்கான தளபாடங்களை விநியோகிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகின்றார். அவரது மகன் கபில்ராஜுக்காக துபாய் விமான நிலையத்தில் வாங்கிய அதிர்ஷ்ட லாபச் சீட்டிற்கே பெருந் தொகைப் பணம் பரிசாக விழுந்துள்ளது.

அந்தப் பணத்தில் தனது நிறுவனத்திற்கு கட்டடம் அமைக்கப் போகியார் என்று கனகராஜ் தெரிவித்தார்.

# கொரோனா ஆபத்து காரணமாக தனிமைப்படுத்தப்படும் புத்தளம்?

கொழும்பு, மார்ச் 19

கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக, புத்தளம் மாவட்டத்தை தனிமைப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 எதிர்பாரா பரவலை தடுப்பதற்காக தேசிய செயற்பாட்டு மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

'கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் முகமாக வெளிநாடுகளில் இருந்த வருவோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ஆனால் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதற்கான ஆபத்து அதிகம் உள்ள இடமாக புத்தளம் மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாலியில் இருந்து, மார்ச் முதலாம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் உட்பட்ட காலத்தில் வந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படாத பலர் புத்தளம் முழுவதும் உள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் பொறுப்பற்றுச் செயற்பட்டால் – சுகாதார ஆலோசனைகளைப் புறக்கணித்தால் – புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கான முடக்கல் குறித்த செயற்பாட்டுக்கு நாம் தள்ளப்படலாம் – என்றார்.

இதேவேளை, இத்தாலியில் இருந்து வருகை தந்த இலங்கையர்களில் அதிகமானவர்கள் புத்தளம் மாவட்டத்திலேயே இருக்கின்றனர் என அவர்கள் எப்போதும் சுகாதார அமைச்சு வழங்கும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விடே வைத்திய அதிகாரி அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தால் உடனடியாகச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்குமாறும் வைரஸ் பரவாதவாறு செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மார்ச் முதலாம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வருகை தந்தவர்கள் தனிமைப்படுத்தப்படவில்லை எனவும் தற்போதைய நிலையில் இவர்களூடாக கொரோனா தொற்றுப் பரவக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என கொரோனா தொற்று பரவலை தடுப்பதற்கான தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவர் இராணுவ தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அந்தக் காலப்பகுதியில் சுமார் 1, 500 முதல் 2, 000 பேர் இவ்வாறு வருகை தந்துள்ளனர் என அவர் சுட்டிக் காட்டியமையுடன் இவர்களில் 800 பேர் வரை புத்தளம் மாவட்டத்தில் வசிக்கிறார்கள் என அவர் மேலும் கூறினார். (ஐ)

## 65 பேர் வெளியில் நடமாடத் தடை

இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் இருந்து வருகை தந்த 65 பேர் அத்தியாவசியத் தேவைகளுக்காக அன்றி வேறு தேவைகளுக்காக 14 தினங்கள் வரை வெளியில் செல்ல வேண்டாமென மாரவில மாவட்ட நீதிவான் ஹேறந்த தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நாத்தாண்டிய, கட்டுனேரிய, மாவில, மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாத்தண்டிய சுகாதார வைத்திய அதிகாரி உபுல் ஜயதிலக்க நீதிமன்றிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## பெரும் கிரிக்கெட் போட்டியில் பார்வையாளராக பங்குபற்றியிருந்தவருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு ரோயல் கல்லூரி – தோமஸ் கல்லூரிக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை நடத்த வேண்டாமென தான் கேட்டுக்கொண்டிருந்தார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனினும், கல்லூரி நிர்வா கங்கள் அந்தப் போட்டியை நடத்த வேண்டுமென விடாப்பிடியாக நின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட எயார்லைன்ஸ் அதிகாரி இந்தப் போட்டியில் பார்வையாளராகக் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியை நடத்த வேண்டாம், இடைநிறுத்தலாமென முடிவு செய்யப்பட்டதாகவும், ஆனால் மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகங்களின் கோரிக்கைகளால் அதை அனுமதித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் கலந்து கொண்ட ஒருவரே வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். இதையடுத்து அவருடன் பணியாற்றிய எயார் லைன்ஸ் ஊழியர்கள் சுய தனிமைக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்து, 187.23 ரூபாவைத் தொட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி நாளுக்கு நாள் வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றது.

இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றில் விற்பனைப் பெறுமதி, 185.08 ரூபாவாகக் காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று 2.15 ரூபா வீழ்ச்சியடைந்து 187.23 ரூபாவைத் தொட்டுள்ளது. (ஐ)

## அம்பாறையில் ஹக்கீம் தரப்புடன் கூட்டணி வைக்காத ரிஷாத் அணி!

கொழும்பு, மார்ச் 18

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன நாடாளுமன்ற தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து போட்டியிடுவதால் அம்பாறை மாவட்டத்தை வெற்றிகொள்ளும் வாய்ப்பு கிட்டும். இதனால் சமூகம் ஒற்றுமைப்பட்டுவிட்டது என்ற பலமாகச் செய்தியை முழு நாட்டுக்கும் எத்திவைக்க முடியும். அதற்காக எத்தகைய விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாராக இருப்பதாக ரவூப் ஹக்கீம் நம்பிக்கை வெளியிட்டபோதிலும், அந்தக் கோரிக்கையை றிஷாத் பதியுதீன் மற்றும் வை.எல்.எஸ். ஹமீட் ஆகியோர் நிராகரித்துவிட்டனர் என முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு இரு கட்சிகளும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து போட்டியிடுவதன் அவசியத்தை வலியுறுத்தி மூத்த அரசியல்வாதி ஏ.எச்.எம். பௌஸியின் ஏற்பாட்டில், அவரது இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை முற்பகலிலும் இரவிலும் இரு கட்டங்களாக நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மௌலவி எஸ்.எச்.ஆதம் பாவா தலைமையில் அம்பாறை மாவட்ட உலமாக்கள் ஆறு பேரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் கிழக்கு மகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தரப்பில் அதன் தலைவர் றிஷாத் பதியுதீன், வை.எல்.எஸ்.ஹமீத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில் இரண்டு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் கூட்டாகச் சேர்ந்து அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளை முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நிசாம் காரியப்பர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், அந்தக் கட்சியின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான ஏ.எல். தவம் ஆகியோர் புள்ளிவிவரங்களுடன் விபரித்துக் கூறினர். இவ் வாறு ஒன்றுபடுவதனூடாக மாவட்டத்தை வெற்றி கொள்ளக்கூடிய சூழ்நிலை முன்னொருபோதும் இருக்கவில்லை என்றும், இந்த வாய்ப்பைத் தவறவிட்டால் இனியொருபோதும் அது சாத்தியமில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும் இவ்விரு கட்சிகளும் திகாமடுல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து போட்டியிடுவதால் போதிய வெற்றிவாய்ப்புகள் இல்லையென்று வை.எல்.எஸ். ஹமீத் அவர் பக்க கருத்துகளைச் சில புள்ளி விவரங்களுடன் முன்வைத்தபோது, றிஷாத் பதியுத்தீனும் அவருக்கு ஆதரவாகவிருந்தார். தனித்துப் போட்டியிடுவதனாலேயே தமது கட்சிக்கான ஆசனத்தை உறுதிப்படுத்தலாம் என்ற நிலைப்பாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தரப்பினர் இருந்தனர் என முஸ் லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

திங்கட்கிழமை காலையிலும் இரவிலுமாக ஏறத்தாழ நான்கரை மணிநேரம் இப்பேச்சு இடம்பெற்றபோதிலும், அம்பாறை மாவட்டத்தில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடும் விடயத்தில் ஆரம்பம் முதலே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் எவ்வித நெகிழ்வுத்தன்மை காணப்படாததோடு, அக்கட்சியினர் இது விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர மறுத்துவிட்டனர் என முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கொரோனா பாதுகாப்பு தொடர்பில் முல்லைத்தீவு செயலகத்தில் கூட்டம்



முல்லைத்தீவு, மார்ச் 19

கொரோனா வைரஸ் பாதுகாப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் மாவட்ட க.விமலநாதன் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகக் கணக்காளர், பிரதேச செயலாளர்கள், முப்படையைச் சேர்ந்தவர்கள் பொலிஸார் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)



# ஒரு கொள்ளை நோயின் பிடியில்....



மு.இராமனாதன்

உலக சுகாதார அமைப்பு கொரோனாவைக் கொள்ளைநோய் என்று அறிவித்திருக்கிறது. கொள்ளைநோயாக அறிவிக்க வேண்டும் என வல்லுநர்கள் சிலர் வலியுறுத்திவந்தார்கள். இதைக் கொள்ளை நோய் என்றுவகைப்படுத்துவதைவிமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த விவாதத்தின் நுழைவாயிலுக்கு வெளியே நிற்கிறது ஒரு கேள்வி: கொள்ளைநோய் என்பது என்ன?

அதற்குச் சில வரையறைகள் உள்ளன. முதலாவதாக, அந்த நோய் மனிதகுலத்துக்கு முற்றிலும் புதியதாக இருக்கவேண்டும். அடுத்த வரையறை, நோய்க் கிருமிகள் மனிதரிலிருந்து மனிதருக்குத் தொற்றக்கூடியதாக இருக்கும். மூன்றாவதாக, நோயால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்களை அது மரணத்தில் கொண்டுபோய் நிறுத்திவிடக்கூடும். கடைசி வரையறை, நோயின் கொடுங்கரங்கள் உலகெங்கும் நீளும். இந்த வரையறைகளுக்கெல்லாம் கொரோனா பொருந்திப்போகிறது. ஆனாலும், கணிசமானோர் இது கொள்ளைநோய் என்று சொல்லப்படுவதை ஏற்பதில்லை.

**வெறும் குளிர்க் காய்ச்சலா?**

தமிழக மருத்துவர் ஒருவரின் ஒலிப்பதிவை நான் அங்கம் வகிக்கும் வாட்ஸ்அப் குழுமங்களில் பலரும் பகிர்ந்திருந்தார்கள். மருத்துவர் இதை ஒரு 'மகிமைப்படுத்தப்பட்ட குளிர்க் காய்ச்சல்' என்றும், வீணாக அலட்டிக்கொள்ள வேண்டாம் என்றும் சொல்லியிருந்தார்.

மருத்துவர்கள் 'RO' என்று ஒரு குறியீடு வைத்திருக்கிறார்கள். இது நோய் தொற்றும் வேகத்தைக் குறிக்கும். சாதாரணக் குளிர்க் காய்ச்சலுக்கு இதன் சராசரி மதிப்பு 1.28 ஆகும். கொரோனாவுக்கு இது 1.4 முதல் 3.8 வரை இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறது

புருஸ்ஸெல்ஸைத் தலைமையிடமாகக் கொண்ட தொற்றுநோய்களுக்கான சர்வதேசச் சங்கம். பெல்ஜியத்தைச் சேர்ந்த உயிரியல் அறிஞர் மார்க் வாத்லெட், கடந்த வாரம் வெளியிட்ட தனது ஆராய்ச்சிக் கட்டுரையில் கொரோனாவின் 'RO' மதிப்பு 4.7 முதல் 7 வரை இருக்கும் என்று எழுதியிருக்கிறார். எவ்வாறாயினும், சாதாரணக் குளிர்க் காய்ச்சலைவிட இது மிக வேகமாகப் பரவக்கூடியது என்பது தெரிகிறது.

அடுத்த வாதம், கொரோனாவால் உண்டாகும் உயிரிழப்புகள் குறைவு என்பதாகும். கடந்த வாரம் தமிழ்த் தொலைக்காட்சி அலைவரிசையில் ஒரு கலந்துரையாடலைப் பார்த்தேன். ஒரு பெரியவர், "இதென்ன பெரிய வைரஸ், மனிதர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து வீழ்ந்த கொள்ளைநோய்களுக்கு முன்னால் இது எம்மாத்திரம்?" என்று கேட்டார்.

பிளேக், காலரா, பெரியம்மை, தட்டம்மை, காசநோய், மலேரியா முதலான கொள்ளைநோய்கள் சாம்ராஜ்யங்களைச் சரித்திருக்கின்றன என்பதும், கோடிக்கணக்கான மக்களைக் காவுவாங்கியிருக்கின்றன என்பதும் உண்மைதான். மேலும், கடந்த 100 ஆண்டுகளில் உலக சுகாதார அமைப்பானது கொள்ளைநோய் என்று அறிவித்தவற்றின் மரணக் கணக்கும் லட்சங்களிலும் கோடிகளிலும்தான் இருக்கிறது.

1918 முதல் 1920 வரை உலகை அச்சுறுத்திய ஸ்பானியக் காய்ச்சலால் உயிரிழந்தவர்கள் 10 கோடிக்கும் மேல். ஆசியக் காய்ச்சல் (1958), ஹொங்கொங் காய்ச்சல் (1968) என்றழைக்கப்பட்ட தொற்றுநோய்கள் ஒவ்வொன்றும் 10 லட்சம் மரணங்களை ஏற்படுத்தின. 1981இல் மரணக் கணக்கைத் தொடங்கியது எய்ட்ஸ். இன்றளவும் மூன்றரைக் கோடி மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள். கொரோனாவுக்கு முன்பு உலக சுகாதார அமைப்பு கொள்ளைநோய் என்று அறிவித்தது 2009இல்.

அப்போதுதான் பன்றிக்காய்ச்சல் பல கோடி மக்களைத் தாக்கியது. இரண்டு முதல் ஆறு லட்சம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்கிறார்கள். ஆக, இதுவரையான கொள்ளை நோய்களோடு ஒப்பிடும் போது கொரோனா உண்டாக்கியிருக்கும் உயிரிழப்புகள் குறைவுதான். என்றாலும், இது கொள்ளைநோய் எனப்பட்டதற்கு என்ன காரணம்?

**மரண விகிதம்**

இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடுவதற்கு முன்னால் மரண விகிதம் குறித்துப் புள்ளிவிவரங்கள் என்ன சொல்கின்றன என்றும் பார்த்துவிடலாம். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.54 லட்சமாக இருந்தபோது, மரணத்தைத் தழுவியவர்களின் எண்ணிக்கை சுமார் 5,900. அதாவது, 3.8%. இதே கொரோனோ வைரஸ் குடும்பத்தைச் சார்ந்த சார்ஸ் (2002), மெர்ஸ் (2012) ஆகியவை மனிதர்களின் மீது படையெடுத்தபோது, அவை ஏற்படுத்திய மரணங்களின் விகிதம் முறையே 10%, 34% என்பதாக இருந்தது.

ஆக, கொரோனாவின் மரணவிகிதம் குறைவுதான். மேலும், டெல்லியிலிருந்து வெளியாகும் ஓர் இணைய இதழ், 'கொரோனாவால் பீடிக்கப்பட்ட 80% பேருக்குப் பாதிப்பு லேசாகத்தான் இருந்தது' என்று எழுதியிருந்தது. சீனாவின் நோய்த் தடுப்பு மையம் என்கிற ஆராய்ச்சி நிறுவனம் இதை உறுதிசெய்கிறது.

நோயால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 18% பேரை மருத்துவமனையிலும், அதில் 4% பேரைத் தீவிர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்க வேண்டிவரும் என்றும் சொல்கிறது மையத்தின் ஆய்வு முடிவுகள்.

ஆக, ஒப்பீட்டளவில் குறைவான உயிரிழப்புகளையே கொரோனா உருவாக்கியிருக்கிறது. அதன் மரணவிகிதம் குறைவு. அப்படி மரணமடைந்தவர்களில் பலரும் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள். இப்படியான தரவுகள் இருக்கும்போது, நாம் ஏன் அஞ்ச வேண்டும் என்றுதான் தமிழக மருத்துவரும் தொலைக்காட்சிப் பெரியவரும் டெல்லிப் பத்திரிகையாளர்களும் கேட்கிறார்கள்.

நமக்கான பதில்


இதற்கான பதிலை நாம் சீனாவில் தேடலாம். கொரோனாவானது இன்ன பிற நோய்களைக் காட்டிலும் வேகமாகத் தொற்றுகிறது. அதிகமானவர்களைப் பாதிக்கிறது. இதில் 18% பேருக்கு மருத்துவமனைச் சிகிச்சை வேண்டியிருக்கிறது. மக்கள் செறிவாக வாழும் இடங்களில் இந்த 18% என்பதே பெரிய எண்ணிக்கையாக அமைந்துவிடுகிறது. நோயை எதிர்கொள்ள இந்த 18% நோயாளிகளுக்கான மருத்துவமனையும் படுக்கையும் மருத்துவர்களும் உபகரணங்களும் இருக்கவேண்டும். வூஹான் நகரில் நோய் பரவுகிற வேகத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவில் மருத்துவமனைகள் இல்லை. அதனால்தான், இரண்டு வாரத்தில் இரண்டு மருத்துவமனைகளைக் கட்டியது சீனா. கல்விச் சாலைகளையும் சமூக நலக்கூடங்களையும் தற்காலிக மருத்துவமனைகளாக்கியது.

கொள்ளைநோய் வரையறுக்கப்படுவது மரணங்களின் எண்ணிக்கையால் அல்ல; மரணமடைவோரின் விகிதத்தாலும் அல்ல. மாறாக, நோயின் ஜுவாலை அதி விரைவாகவும் உலகின் பல பாகங்களுக்கும் பரவுகிறபோது அது கொள்ளைநோயாகிறது. கொரோனாவைப் போன்றே சார்ஸ், மெர்ஸ் ஆகிய தொற்றுநோய்களும் கொரோனோ வைரஸ் குடும்பத்தைச் சார்ந்தவைதான்; ஆனால், அவை கொள்ளைநோய் என்று அறிவிக்கப்படவில்லை.

சார்ஸ் மிகுதியும் சீனாவையும் ஹாங்காங்கையும் பாதித்தது. மெர்ஸின் கரங்களில் மாண்டவர்கள் மிகுதியும் சவுதி அரேபியர்கள். ஆனால், கொரோனா இப்போது 160 நாடுகளில் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஜனவரி மூன்றாம் வாரத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 99% சீனர்களாக இருந்தார்கள் என்பதோடு இதைப் பொருத்திப் பார்க்க வேண்டும். கடந்த இரண்டு வாரங்களில் சீனாவுக்கு வெளியே நோயின் பாதிப்பு பல மடங்கு அதிகரித்திருக்கிறது. கொரோனா ஒரு கொள்ளைநோய் அல்ல என்று நிறுவ முயல்வதால் நாம் அடையப்போவது ஏதுமில்லை! *நன்றி: தி இந்து தமிழ்*

---

# கொரோனாவுக்கான தடுப்பு மருந்து எப்போது பயன்பாட்டுக்கு வரும்?



உலகளாவிய தொற்றாக அறிவிக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸை மேலும் பரவாமல் தடுப்பதற்கான தடுப்பு மருந்தை உருவாக்கும் பணிகள் தற்போது அமெரிக்காவில் தீவிரமடைந்துள்ளன.

மனிதர்கள் மீது கொரோனாவுக்கான தடுப்பு மருந்தைச் சோதித்துப் பார்க்கும் பணிகள் அங்கு ஆரம்பமாகியுள்ளன. சியாட்டில் நகரில் செயல்படும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றில், முதற்கட்டமாக நான்கு தன்னார்வலர்களுக்கு இந்த தடுப்பு மருந்து செலுத்தப்பட்டுள்ளதாக அசோசியேட் பிரஸ் செய்தி தெரிவித்துள்ளது.

இந்த தடுப்பு மருந்து கொரோனா வைரஸ் தொற்றை உருவாக்காது. ஆனால் கொரோனா வைரஸின் மரபணு குறியீட்டைப் பிரதி எடுத்து இந்த புதிய தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த தடுப்பு மருந்து செலுத்தப்படும் மனிதர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

இந்த தடுப்பு மருந்தும், இதே போல உலகின் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்பட்டு வரும் மற்ற தடுப்பு மருந்துகளும், கொரோனா வைரஸை குணப்படுத்துமா என்பதை அறிய இன்னும் சில மாதங்கள் ஆகலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சியாட்டில் நகரைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளுக்குத் தாயான 43 வயது பெண்மணியிடம், இந்த புதிய கொரோனா தடுப்பு மருந்து முதன்முதலாகப் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

``கொரோனை வைரஸை தடுக்க என்னால் முடிந்த ஒரு உதவியைச் செய்துள்ளேன்`` என அந்த பெண்மணி தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதிலும் கொரோனாவுக்கான தடுப்பு மருந்தைக் கண்டறியும் பணியில் பல ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதே நேரத்தில் இந்த தடுப்பு மருந்து, விலங்குகளின் நோய் எதிர்ப்புத்திறனைத் தூண்டுமா என்பதை உறுதிப்படுத்தும் சோதனைகளும் வழக்கம் போல நடைபெறும்.

ஆனால் இந்த தடுப்பு மருந்து தயாரிப்பின் பின்னணியில் இருக்கும் உயிரி தொழில்நுட்ப நிறுவனமான மாடர்னா தெரபெடிக்ஸ் நிறுவனம், ஏற்கனவே பரிசோதிக்கப்பட்டு, முயற்சி செய்யப்பட்ட வழிமுறைகள் மூலம் உருவாக்கப்பட்டதாகக் கூறுகிறது.

`இந்த தடுப்பூசி அதி உயர் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த தடுப்பு மருந்து மனிதர்களுக்குப் பாதுகாப்பானது. இந்த தடுப்பு மருந்தினால் சோதனை நடத்தப்பட்டவர்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். உண்மையில் மிக வேகமாக இந்த தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இது வைரஸுக்கு எதிரான ஒரு பந்தயம். மற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு இடையிலான பந்தயம் கிடையாது. மேலும் இது மனிதக்குலத்திற்குப் பயன் அளிப்பதற்காக வேகமாக நடத்தப்படுகிறது. ``என லண்டன் இம்பீரியல் கல்லூரியின் தொற்றுநோய் நிபுணர் ஜான் ட்ரோகோனிங் தெரிவித்தார்.

பொதுவாக தட்டம்மை போன்ற வைரஸ்களுக்கான தடுப்பு மருந்து, பலவீனமடைந்த அல்லது கொல்லப்பட்ட வைரஸ்களின் மூலம் உருவாக்கப்படும். ஆனால் கொவிட் 19 தொற்றை ஏற்படுத்தும் வைரஸ் மூலம் தற்போதைய இந்த தடுப்பு மருந்து உருவாக்கப்படவில்லை.

அதற்குப் பதிலாக, விஞ்ஞானிகளால் ஆய்வகத்தில் உருவாக்க முடிந்த, கொவிட் வைரஸிலிருந்து நகலெடுக்கப்பட்ட மரபணு குறியீட்டின் ஒரு சிறிய பகுதியை இது உள்ளடக்கியுள்ளது.

உண்மையான தொற்றை எதிர்த்துப் போராடும் அளவுக்கு மனித நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு இந்த தடுப்பு மருந்து உந்துதல் அளிக்கும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இந்த சோதனை தடுப்பு மருந்து தன்னார்வலர்கள் மீது பல்வேறு அளவுகளில் செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது. தன்னார்வலர்களுக்கு அடுத்த 28 நாட்களுக்கு, நாள் ஒன்றுக்கு இரண்டு முறை என கையின் மேல் தசை பகுதியில் இந்த தடுப்பு மருந்து செலுத்தப்படும்.

இந்த முதல்கட்ட பரிசோதனைகள் வெற்றி அடைந்தால், உண்மையான, அங்கீகரிக்கப்பட்ட தடுப்பு மருந்து செயல்பாடுக்கு வர இன்னும் 18 மாதங்கள் ஆகும். *நன்றி : பிபிசி தமிழ்*






# 14 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டம் தெல்லிப்பழை மகாஜனா, கிண்ணியா மத்திய கல்லூரி சம்பியனாகின

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கம் நடத்திய 11ஆவது அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான சமபோஷா கிண்ண (14 வயதின் கீழ்) உதைபந்தாட்டப் போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியும் கிண்ணியா மத்திய கல்லூரியும் சம்பியன் பட்டங்களை சுவீகரித்தன.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பொலன்னறுவை பெந்திவெள மகா வித்தியாலய அணியை 4 – 3 என்ற பெனல்டி அடிப்படையில் மகாஜனா அணி வெற்றிகொண்டு சம்பியனானது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இறுதிப் போட்டி 1 – 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்ததை அடுத்து சம்பியன் அணி பெனல்டி முறையில் தீர்மானிக்கப்பட்டது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் மகாஜனா கல்லூரி இதே வயதுப் பிரிவில் முதல் தடவையாக சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டிக்கு முன்னோடியாக நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் ரிதிகம, கவிசிகமுவ மத்திய கல்லூரியை 3 – 1 என்ற கோல்கள் அடிப்படையில் மகாஜனா இலகுவாக வெற்றிகொண்டிருந்தது.

இதேவேளை, ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை 2 – 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிகொண்டு கிண்ணியா மத்திய கல்லூரி சம்பியனானது. இதற்கு முன்னோடியாக நடைபெற்ற அரை இறுதியில் கண்டி சில்வெஸ்டர் கல்லூரியை 3 – 1 என்ற கோல்கள் அடிப்படையில் கிண்ணியா மத்திய கல்லூரி வெற்றிகொண்டிருந்தது.

பெண்கள் பிரிவில் மகாஜனா கல்லூரியின் ஜே. லயன்சிகா சிறந்த வீராங்கனையாகவும் வை.ரேன்சனா சிறந்த கோல்காப்பாளராவும் தெரிவாகினர்.

ஆண்கள் பிரிவில் கிண்ணியா மத்திய கல்லூரியின் கே. எம். கிப்னி சிறந்த விரராகவும் நௌாத் மஹ்றூப் சிறந்த கோல்காப்பாளராகவும் தெரிவாகினர்.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இருபாலாருக்குமான சமபோஷா கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் 500க்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றியமையுடன் 32 பிரதேசங்களில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான போட்டிகளில் சம்பியனான 32 பாடசாலைகளும் 28 பிரதேசங்களில் நடத்தப்பட்ட பெண்களுக்கான போட்டிகளில் சம்பியனான 28 பாடசாலைகளும் தேசிய மட்ட இறுதிச் சுற்றில் பங்குபற்ற தகுதிபெற்றிருந்தன.

**சம்பியன் அணிகள் விவரம்: -**

மகாஜனா:

ஐ. கீர்த்திகா (அணித் தலைவி), ஜே. லயன்சிகா, எஸ். ஹம்ஷியா, ரீ. சஸ்மி, எ. சர்மிகா, எ. தனுசியா, ரீ. தாரணிகா, யூ. சகீனா, எம். துஸ்மிகா, ஜே. ஜான்சி, எஸ். ரம்மியா, ஆர். தீபிகா, வை. ரேன்சனா, ஈ. ரக்ஷயா, ஜே. தேவரகா, ஆ. கோமிகா, வை. உமாசங்கவி, எம். தபீனா, எஸ். டொசாகா, எஸ். ரஜிதரணி. பயிற்றுநர்: எஸ். சாந்தகுமார், பொறுப்பாசிரியை: எஸ். லோஜினி.

கிண்ணியா மத்தி:

கே.எம். கிபினி, எம். இம்தாத், எப். சலாஹி, என்.எம். சப்ராஸ், எம். முபீன், கெ.எம். சராப், என். மஹ்றூஸ், எம். மிஷால், எஸ்.எம். பசீத், எம். ரினாஸ், என். ரிவ்கி, ஏ. பாதிஹ், எம். நஜீஹ், எஸ். ஹனிப், எம். ஆசிக், டி.எம். உதய், எம்.எம்இ இன்பாஸ், எப்.எம். ரபுனான். பயிற்றுநர்: என்.ஜே.எம். ஆசிக், பொறுப்பாசிரியர்: எச்.எம். இப்ஹாம்.

# கொரோனா தொற்றுக்குள்ளான உதைபந்தாடப் பயிற்சியாளர் பலி!



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய ஸ்பெயினைச் சேர்ந்த உதைபந்தாட்டப் பயிற்சியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஸ்பெயினை சேர்ந்த 21 வயதான பிரான்சிஸ்கோ கார்சியா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிரான்சிஸ்கோ கார்சியா அட்லெடிகோ போர்டா அல்டா கழகத்தின் பயிற்சியாளராக இருந்து வந்தார்.

இந் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அவர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் அங்கு சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். அவரது மறைவுக்கு அட்லெடிகோ போர்டா அல்டா கழகம் இரங்கல் தெரிவித்துள்ளது.

# கொரோனா விழிப்புணர்வு தொடர்பில் பி.வி.சிந்து விராட் கோஹ்லிக்கு சவால்



கொரோனாநோய்த்தொற்றுபரவாமல் தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் காணொலியை இந்திய பட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து ருவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

இந்தக் காணொலியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க அடிக்கடி கைகழுவ வேண்டும் என்று கூறியுள்ள அவர், கைகளை எவ்வாறு சுத்தமாக கழுவ வேண்டும் என்பதை செயல் விளக்கமாகக் காட்டியுள்ளார்.

மேலும் அவர் இது போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் காணொலியை மத்திய விளையாட்டுத் துறை மந்திரி கிரண் ரிஜிஜு, இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி, டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஆகியோர்வெளியிடவேண்டும். எனது இத்தகைய சவாலை ஏற்க வேண்டும் என்றும் பதிவிட்டிருக்கிறார்.

சிந்துவின் சவாலை உடனடியாக ஏற்றுக்கொண்ட மத்திய விளையாட்டு துறை மந்திரி கிரண் ரிஜிஜு, தானும் கைகழுவது போல் உள்ள காணொலிக் காட்சியை ருவிட்டரில் வெளியிட்டு பிறகு மத்திய மந்திரி ஸ்மிருதி இரானி, இந்திய மேசைப்பந்து வீராங்கனை மனிகா பத்ரா, பிரபல பாடகர் அதனன் சாமி ஆகியோருக்கு விழிப்புணர்வு சவால் விடுத்துள்ளார்

## அச்சுறுத்தும் கொரோனா

# பாக். சுப்பர் லீக் ரத்து

கொரோனா வைரஸ் பரவல் உலகை அச்சுறுத்திவரும் நிலையில் பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் அரையிறுதி போட்டிகள் மற்றும் இறுதி போட்டி இரத்து செய்யப்பட்டுள்ளது.

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அனைத்து வகை விளையாட்டு போட்டிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன. இறுதியாக ஒன்றிரண்டு போட்டிகள் ரசிகர்கள் யாரும் இன்றி மூடிய மைதானத்திற்குள் நடைபெற்றன.

இந்நிலையில், பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி 20 போட்டிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. நடப்பாண்டுக்கான தொடர் இறுதி கட்டத்தை எட்டியதால் போட்டியை நடத்தி முடித்திட பாகிஸ்தான் ஆர்வம் காட்டியது.

இதற்கிடையே வெளிநாட்டைச் சேர்ந்த வீரர்கள் சொந்த நாடுகள் திரும்ப ஆரம்பித்தனர். லீக் சுற்றின் கடைசி இரண்டு ஆட்டங்களில் சில வெளிநாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். அதன்பின் அவர்களும் வெளியேற ஆரம்பித்தனர். இந்த இரண்டு ஆட்டங்களும் மூடிய மைதானத்திற்குள் நடைபெற்றன.

கொரோனா பீதியால் ‘பிளே ஓவ்’ சுற்று முறை அரையிறுதி ஆட்டங்களாக மாற்றப்பட்டது. நேற்றுமுன்தினம் இரண்டு அரையிறுதி ஆட்டங்களும், நேற்று இறுதி போட்டியையும் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த மூன்று போட்டிகளும் லாகூரில் நடைபெற இருந்தன.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு அதிகமாக இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் எஞ்சிய போட்டிகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ரத்து செய்துள்ளது.

இந்த தொடரில் முல்தான் சுல்தான்ஸ் அணி 10 ஆட்டங்களில் 6 இல் வெற்றி பெற்று புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

தொடர் இரத்துச் செய்யப்பட்டதால் முல்தான் சுல்தான்ஸ் அணிக்கு சம்பியன் பட்டம் வழங்க வேண்டும் என்று சகீட் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அப்ரிடி பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் முடிவு கவலை அளிக்கிறது. என்றாலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முக்கியமானது. வெளிநாட்டு வீரர்கள் அவர்களது சொந்த நாடு திரும்புவது அவசியம்.

இந்த முடிவை முன்னதாக எடுத்திருக்க வேண்டும். வெற்றிக் கிண்ணத்தைப் பொறுத்த வரையில் புள்ளிகள் பட்டியலில் முதல் இடம் பிடித்த அணிக்கு வழங்க வேண்டும் என டுவிட்டரில் கூறியுள்ளார்.

# தமிழ் மக்களுக்கான தீர்வை ஐ.தே.க. மட்டுமே வழங்கும்

## கூறுகின்றார் விஜயகலா மகேஸ்வரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

தமிழ் மக்களுக்கான தீர்வு உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியும் என்று முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது ஆட்சியில் உள்ளவர்களுக்கு ஜனநாயகம் என்றாலே என்னவென்று தெரியாது என்றும் அவர் கூறினார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று கடந்த இரண்டு தடவைகள் நான் நாடாளுமன்றம் சென்றிருந்தேன். இதன் முன்னர் இரண்டு தடவைகள் எனது கணவர் மகேஸ்வரன் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியிலும், மூன்றாவது தடவை கொழும்பு தேர்தல் தொகுதியில் போட்டியிட்டும் நாடாளுமன்றம் சென்றிருந்தார்.

கடந்த காலங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் மக்களுக்கான விடிவு காணப்பட்டது. குறிப்பாக வடக்கு – கிழக்கில் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்புக்கள் மட்டுமல்லாது தீர்வுத்திட்டம் தொடர்பிலும் பல முன்னெடுப்புக்களைச் செய்திருந்தோம்.

ஜனநாயக ரீதியான வாழ்க்கையை கடந்த 5 வருடமாக நாங்கள் வாழ்ந்திருந்தோம். ஆனாலும் கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக எங்கள் கட்சியின் வேட்பாளருக்கு வடக்கு – கிழக்கு மாக்கள் வாக்களித்திருந்த வேளையிலும் மாற்றுக் கட்சி வெற்றி பெற்றிருந்தது.



அந்த மாற்றுக் கட்சியால் வடக்கு – கிழக்கு மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. இதனை கடந்த காலத்தில் அவர்களின் ஆட்சி தெட்டத் தெளிவாகக் காட்டியிருந்தது.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தவேளை தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுத்திருந்தார்கள். காணாமற்போனவர்களை அவர்களின் உறவுகள் இன்றுவரை தேடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், எமது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்த பின்னர், காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான அலுவலகத்தைத் திறந்துள்ளோம். முன்னாள் போராளிகளுக்கு வழங்கப்படவேண்டிய வேலை வாய்ப்புக்கான நிதிகளை ஒதுக்கி கொடுத்துள்ளோம்.

மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்த கொப்பனவுகளை உயர்த்திக் கொடுத்துள்ளோம். இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை வழங்கியிருந்தோம். அதிகளவிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

இதற்கும் அப்பால் தீர்வுத்திட்டம் தொடர்பில், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருந்தோம். இது நடந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் அச் சந்தர்ப்பத்தில்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர் கட்சியினருடன் கைகோர்த்தார். 52 நாள்கள் போராடி மீண்டும் ஆட்சியை கைப்பற்றியிருந்தோம்.

வடக்கு – கிழக்கை ஆண்டுகொண்டிருந்த தலைவருடனான பேச்சு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. நோர்வே ஒஸ்லோவில் பேச்சு ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாகத்தான் பாதைகள் திறந்துவிடப்பட்டன.

இவ்வாறு எமது ஆட்சியில்தான் ஜனநாயகம் என்பது உருவாக்கப்பட்டிருந்தது. இன்றைய அரசுக்கு ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாது. அராஜகம்தான் இங்கு நடக்கின்றது.

எனவேதான் எமது ஆட்சிக் காலத்தில் இடை நடுவில் நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீண்டும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எமக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவையாக உள்ளது.

தமிழ் மக்களுக்கான தீர்வு என்பது மட்டுமல்லாமல், ஏனைய தேவைகளையும் ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாகவே பெற்றுக் கொடுக்க முடியும் –என்றார்.(ஐ–07)

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கொரோனா அபாயம் நீங்கும்வரை ஜனநாயகமான தேர்தல் நடக்காது!

## சுட்டிக்காட்டுகின்றார் சுமந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஜனநாயக ரீதியான தேர்தல் நடக்கவேண்டுமாக இருந்தால் தற்போதுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் அச்சம் நீங்கும்வரை நாடாளுமன்ற தேர்தலை பிற்போடவேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சம் நீங்கும்வரை எந்தத் தேர்தல் பரப்புரைகளையும் மேற்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்துள்ள அவர், ஏனையவர்களும் மக்களின் பாதுகாப்பை முதன்மையாகக் கருதி மக்களை ஒன்றிணைத்து மேற்கொள்ளும் பரப்புரைகளை கைவிடவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைக் கைய ளித்த பின்னர் செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். தேர்தல் தொகுதியில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் வேட்புமனு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. இந்த 5 தேர்தல் மாவட்டங்களிலும் நேற்று வேட்புமனுக்கள் தாக்கல் செய் யப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து தேர்தல் ஆணைக்குழு இன்று வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் காலம் முடிவடைந்த பின்னர் சில தீர்மானங்கள் எடுக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கூட்டாக இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளோம்.

குறிப்பாக கொரோனா வைரஸ் பரவும் அபாயம் காரணமாகப் பொது மக்களின் பாதுகாப்பை முதன் மையானதாகக் கருதி, தேர்தலைப் பிற்போட வேண்டும் என்று அந்த அறிக்கையில் கோரியுள்ளோம்.

பொது மக்களின் பாதுகாப்புத்தான் எங்கள் அதி உச்சக் கரிசனையாக உள்ளது. ஆனாலும் அதனுடன் சேர்ந்து சுயாதீனமான தேர்தல் நடக்கவேண்டுமாக இருந்தால் ஜனநாயகப் பண்பியல்புகள் பல நடமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சுயாதீனமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகள் செய்யப் படவேண்டும். மக்கள் பரப்புரைக் கூட்டங்களுக்குச் சென்று வரக்கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும். தேர்தலன்று மக்கள் அச்சமில்லாமல் சென்று வாக்களிப்பதற்கான சூழ்நிலை இருக்க வேண்டும்.

இவ்வாறான சூழல் இருந்தால்தான் சரியான, முறையான தேர்தலாக இருக்கும். ஆகவே ஆட்சியிலே உள்ள கட்சியைத் தவிர தேர்தலில் போட்டியிடும் ஏனைய பல கட்சிகள் தேர்தலைப் பிற்போடுமாறு கோரியுள்ளன.

வேட்புமனுக் காலம் நீடிக்கப்படாத காரணத்தினால் நாங்கள் அமைதியாக, எவருக்கும் இடையூறு இல்லாமல், சனநெருக்கடி இல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளோம்.

இதை தொடர்ந்து எமது பரப்புரைகளையும் நாங்கள் நிறுத்தி வைப்போம். பொது மக்கள் கூடும் சூழ்நிலைகளை நாங்கள் தவிர்ப்போம். பொறுப்போடு செயற்படுகின்றோம். மற்றவர்களும் பொறுப்போடு செயற்படுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

சூழ்நிலை சரியான நிலைமைக்கு திரும்புகின்ற போது நாங்கள் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம் என்பது எங்களது நம்பிக்கையாக உள்ளது – என் றார். (ஐ – 07)

## கணவனை இழந்த பெண்ணின் வீட்டுக்குத் தீ வைத்த விசமிகள்!

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி அக்கராயன் குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெங்காதரன் குடியிருப்பில் வீடு ஒன்றுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது என வீட்டின் உரிமையாளரான பெண் தெரிவித்துள்ளார்

மிகவும் வறுமைகோட்டுக்கு உட்பட்டு கணவனால் கைவிடப்பட்டு இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் குடும்பத்தின் அரை நிரந்தர வீடே தீயினால் எரிந்து அழிந்துள்ளது.

மின்சாரக் கட்டணம் செலுத்த முடியாத காரணத்தால் வீட்டின் மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டிருந்தது. எனவே மின் ஒழுக்கினால் தீ ஏற்படவில்லை எனத் தெரிவித்த அவர், என் குடும்பத்தின் வறுமையை கண்டு தொண்டு நிறுவனம் ஒன்றினால் தற்காலிக விடு அமைத்துக் கொடுக் கப்பட்டது. இவ்வீட்டிற்கே நேற்றுமுன்தினம் இரவு தீ வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

கட்டாக்காலி நாய்க்கடிக்கு உள்ளான தனது பிள்ளையை அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் இரவு 11 மணி அளவில் தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்னியில் வேட்புமனு தாக்கல்!



வவுனியா, மார்ச் 19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பன இணைந்து வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்திருந்தது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் வேட்பாளர்கள் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

முன்னதாக பொங்குதமிழ் நினைவுத் தூபிக்குச் சென்று மலர் தூவி, தீபம் ஏற்றி மண்ணுக்காக இறந்தவர்கள் நினைவாக அஞ்சலி செலுத்திய பின் வேட்புமனுப் பத்திரத்தில் கையொப்பம் இட்டு மாவட்ட செயலகத்துக்கு சென்றிருந்தனர்.

இந்தக் கட்சி சார்பில் சிவபாதம் கஜேந்திரகுமார், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், தனபாலசுந்தரம் தமிழகன், தங்கராஜா நிரஞ்சன், கனகையா அழகேந்திரன், செல்லத்தம்பி திலகநாதன், மேரிறெஜீனா சஜீந்திரசிங்கம், அந்தோணி அமிர்தநாதன் தற்குரூஸ், செல்லத்துரை சிறீரங்கநாதன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். (ஐ – 100)

## பொருள்களைப் பதுக்கிய சதொச!

வவுனியா நகரை அண்மித்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசியப் பொருள்கள் சில பதுக்கப்பட்டமையை அடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் அது முறியடிக்கப்பட்டது.

ஒரு கிலோ கிராம் பருப்பு 65 ரூபாவுக்கும் மீன் ரின் 100 ரூபாவுக்கும் நேற்று அதிகாலை 12.00 மணிமுதல் விற்பனைசெய்யப்படவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய வெளியிட்ட விசேட அறிவிப்பையடுத்து நாடளாவிய ரீதியில் பொதுமக்களின் கொள்வனவு அதிகரித்துள்ளது.

அந்த வகையில் வவுனியா நகரை அண்மித்துள்ள சதொச விற்னை நிலையத்தில் காசாளர் மேசையின் கீழ்ப்பகுதியில் மீன் ரின் இருந்தபோதிலும் அது முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினருக்குப் பொதுமகனொருவர் தகவல் வழங்கியமையையடுத்து சதொச விற்பனை நிலையத்திற்கு விரைந்த பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது களஞ்சிய அறையிலிருந்து ஒரு பெட்டி மீன் ரின்னைக் கைப்பற்றியமையுடன் காசாளர் மேசையின் கீழ்ப்பகுதியில் இருந்த மீன் ரின்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட மீன் ரின்களை மக்களுக்கு விற்பனை செய்யுமாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் சதொச உத்தியோகத்தர்களுக்கு உத்தரவு பிறப்பித்தமையையடுத்து பொதுமக்களுக்கு மீன் ரின் வழங்கப்பட்டது.

எனினும் பதுக்கல் நடவடிக்கையினை மேற்கொண்ட சதொச உத்தியோகத்தர்கள் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் எவ்வித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வன்னியில் வேட்புமனு தாக்கல்!

வவுனியா, மார்ச் 19

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காகத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியும் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

இதன்போது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையிலான ஏனைய வேட்பாளர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்தக் கட்சியில் பொறியியலாளர் தி.கெங்காதரன், ஓய்வுபெற்ற வலயகல்வி பணிப்பாளர் மாலினி வெனிற்றன், ஆசிரியர் வ.இராசரத்தினம், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ப.உமாபதி, வைத்தியர் குணசீலன், ஓய்வுபெற்ற பிரதி கல்விபணிப்பாளர் ச.இராசன், வங்கிமுகாமையாளர் கோ. சற்குணபாலன், பொறியியலாளர் ப.சதானந்தம் ஆகியோர் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நீதியின் குரல்கள் விரைவில் நாடாளுமன்றில் ஒலிக்கும்

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 19

நீதியின் குரல்கள் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் எனத் தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் உண்மையானவர்கள் யார், நேர்மையானவர்கள் யார் என்பது மக்களுக்கு நன்கு தெரியுமென்றும் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுத் தாக்கல் செய்திருந்தார் நீதியரசர் விக்கினேஸ்வரன். அவருடன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யார் உண்மையானவர்கள், யார் நேர்மையானவர்கள் என்பது எங்கள் மக்களுக்கு நன்கு தெரியும். ஆகவே எமது மக்களுக்கான அவ்வாறான நீதியின் குரல்கள் நாடாளுமன்றத்தில் வெகு விரைவில் ஒலிக்கும் என்பது எனது நம்பிக்கை.

அது உலகின் ஆன்மாவைத் தொடும் என்றும் நான் நம்புகின்றேன். நிச்சயம் உலகத்தின் சிந்தனைகள் மாறும். எமது மக்களுக்கான நீதி கிடைக்கும் என்பதை என் மக்களுக்கு நான் கூறுகின்றேன் – என்றார்.

(ஐ – 07)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 பேர் சுயதனிமைப்படுத்தல்

முல்லைத்தீவு, மார்ச் 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த ஒரு கொரோனா நோயாளியும் அடையாளம் காணப்படவில்லை. வெளிநாட்டில் இருந்து வருகை தந்த 42 பேரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கண்காணித்து வருகின்றோம் என பிராந்திய சுகாதாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பாதுகாப்பு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன், முப்படையைச் சேர்ந்தவர்கள், பொலிஸார், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், செயலாளர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா வைரஸிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பாகவும் முல்லைத்தீவு மாவட்ட மக்களை பாதுகாப்பதற்காக எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சுகந்தன் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த ஒரு கொரோனா நோயாளியும் அடையாளம் காணப்படவில்லை. வெளிநாட்டில் இருந்து வருகை தந்த 42 பேரை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கண்காணித்து வருகின்றோம். மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றோம்– என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தெரிவிக்கையில் –

மார்ச் முதலாம் திகதியில் இருந்து இதுவரை வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களின் விவரங்களை திரட்டியுள்ளோம். பொதுமக்கள் கூடும் பிரதேசமாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் பங்குனித் திங்கள் உற்சவ காலமாக இந்த மாதம் காணப்படுகின்றது. ஆலயத் தலைவர் நிர்வாகிகளை அழைத்து விசேட கூட்டம் ஒன்று நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

இந்த இடர் நிலையைப் பாவித்து கடைகளில் அதிக விலையில் பொருள்களை விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திய அவசிய பொருள்களை கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்க ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

எமது மாவட்ட உற்பத்தி பொருள்களை எமது மக்கள் நுகர்வதற்கு தேவையான நடவடிக்கை பிரதேச செயலாளர்கள் ஊடக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2020 இல் வெளியிடப்பெற்றது.